# வெருகல்

# ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் வசனம்




வைத்திய கலாநிதி
நாகரத்தினம் கணேசலிங்கநாதன்

# வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் வசனம்

வைத்திய கலாநிதி
நா. கணேசலிங்கநாதன்

வெளியீடு:-
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவையின்
வேல்நடை பஜனைக்குழு

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் தலைப்பு | :- | வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் வசனம் |
| நூலாசிரியர் | :- | நா. கணேசலிங்கநாதன்<br>வைத்தியகலாநிதி,<br>70, திருமால் வீதி,<br>திருக்கோணமலை. |
| மொழி | :- | தமிழ் |
| முதல் பதிப்பு | :- | செப்டெம்பர் 2005 |
| உரிமை | :- | ஆசிரியருக்கே |
| நூலின் அளவு | :- | A5 |
| மொத்தப்பக்கங்கள | :- | 64 |
| மொத்தப்பிரதிகள் | :- | 1000 |
| விலை | :- | 100/= |
| அச்சகம் | :- | ரெயின்போ மினிலாப் (பி.ரி.இ) லிமிட்டட்<br>361, நீதிமன்ற வீதி,<br>திருக்கோணமலை.<br>தொ.பே. 026-2227354, 2227498 |
| வெளியீடு | :- | திருக்கோணமலை மாவட்ட<br>இந்து இளைஞர் பேரவையின்<br>வேல்நடை பஜனைக்குழு. |

# ஆசியுரை

சரவணப் பொய்கையில் சண்முகனாக அவதரித்து பிரணவத்தை பிரமனுக்கே புலப்படுத்தி, இந்திரன் புதல்வியை கிரியா சக்தியாகவும், குறவர் குலப்பெண்ணை இச்சா சக்தியாகவும் கொண்டு கலியுகம் உய்விக்கும் கலியுகவரதனாக காணுமிடமெல்லாம் காட்சிதந்து அருள் புரிபவன் சரவணப் பெருமான்.

அவன் திருக்கடாட்சம் வெருகலம்பதியில் வேண்டுவோர் துயர்களையும், கீர்த்திமிகு கடவுளாக எல்லாம் வல்ல சித்திரவேலாயுத சுவாமி கோவில்கொண்டு அருள்புரிகிறார். இவரின் அருளாட்சி தொன்றுதொட்டு பாமரராலும், பாவலராலும் போற்றப்பட்டுவந்ததொன்றாகும். பண்டைய மன்னர்கள் வெருகற்பதி வேலாயுதர்மீது தீராத பக்திகொண்டு தொண்டாற்றி வந்துள்ளனர். அந்த வகையில் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் குறிப்பிடத்தக்க அரசனாவான். கடந்த 2000ம் ஆண்டு தொடக்கம் திருமலை இந்து இளைஞர் பேரவையின் நடைபஜனைக்குழு கால் நடை பஜனை செய்துவருவதும் கண்கூடு.

தம்பலகமத்தைச் சேர்ந்த திருவாளர் ஐ. வீரக்கோன் முதலியார் அவர்கள் "வெருகற்பதி சித்திரவேலாயுதர் காதல்" எனும் பக்திப்பிரவாகமிகு பிரபந்தம் ஒன்றைப் பாடியுள்ளார். 1686ல் பாடப்பட்ட இந்நூல் காலத்தால் முந்தியது. யாப்பமைதி, ஓசைநயம், அணிநயம் மிக்கது. எல்லோராலும் இதன் நுண்பொருள் தெளிவுறல் இல்லாமை கண்டு அன்பர் டாக்டர். நா. கணேசலிங்கநாதன் அவர்கள் இந்நூலை எளிய வசன நடையில் பொருளுணர்ந்து யாத்துள்ளார். இவ்வரிய காரியம் யாராலும் பாராட்டப்படவேண்டியதொன்றாகும். காப்பில் தொடங்கி வாழ்த்தில் முடியும். இந்நூல் பக்திப்பரவசமும், சிருங்கார ரசமும் மிக்கதாகும். இப்பணிபுரிந்த இவர்க்கும் இவரோடு இணைந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ பத்திரகாளியம்பாளினதும், வெருகற்பதி வேலாயுத சுவாமியினதும் பூரண நல்லாசி வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**சுபம்**

**இவ்வண்ணம்,**
**வேதாகமமாமணி சோ. இரவிச்சந்திரகுருக்கள்,**
**ஸ்ரீ பத்திரகாளியம்பாள் தேவஸ்தானம்,**
**திருக்கோணமலை.**

# அணிந்துரை

"வெருகற் சித்திரவேலாயுதர் காதல்" என்ற பிரபந்தத்தை தம்பலகமம் ஸ்ரீமான்.ஐ.வீரக்கோன் முதலியார் சுமார் 1686ஆம் ஆண்டளவில் பாடியிருக்கிறார் என்பதை நூலின் அகச்சான்றுகளால் அறியமுடிகிறது.

இந்த நூலை எனது விளக்க உரையுடன் இந்துசமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் வெளியீடு செய்தது.

இந்தப் பிரபந்தம் செய்யுள் நடையில் இருப்பதால் பாமர மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் டாக்டர் நா.கணேசலிங்கநாதன் அவர்கள் வசனரூபப்படுத்தி எழுதி வெளியிடுவது தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் செய்யும் பெருந் தொண்டாக அமைகிறது.

தமிழில் உள்ள 96 வகைப் பிரபந்தங்களுள், உலா, குறவஞ்சி என்பன தெய்வீகமாகவும் லௌகீகமாகவும் பொருள்கொள்ளத் தக்கவை. தலைவன் ஒருவன் தன் பரிவாரங்கள் சூழ வீதியில் உலா வருவது இலக்கிய வகையில் உலா எனப்படும்.

சேரமான் பெருமான் நாயனார் பாடிய திருக்கைலாய ஞான உலா உலாவகையில் முதல்நூலாக உள்ளது.

சிவபெருமான் திருக்கைலாயத்தில் திருமால், பிரமன், கணபதி, முருகன் உட்பட பல தெய்வங்கள் புடைசூழ்ந்துவர இடப வாகனத்தில் அமர்ந்து உலாவந்ததாயும் அவ்வுலாவினைக்கண்ட எழுவகைப் பெண்களும் மையல்கொண்டு மயங்கியதாகப் பொருள்படப் பாடப்பெற்றுள்ளன.

சுந்தரர் இவ்வுலக வாழ்க்கையை முடித்துக் கைலாயம் செல்ல வேண்டிய காலம் வந்தபோது அவரை அழைத்துச் செல்ல சிவபெருமானால் வெள்ளை யானை ஒன்று அனுப்பி வைக்க சுந்தரர் அதிலேறி ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தார். இதனை அறிந்த சேரமான் பெருமான் நாயனார் தமது குதிரையின் காதில் பஞ்சாச்சர மந்திரத்தை ஓதி அக்குதிரையில் அமர்ந்து திருக்கைலாயத்தை அடைந்தார்.

இவ்வாறு சுந்தரரைத் தொடர்ந்து சென்ற சேரமான் பெருமான் நாயனார் தாம் பாடிய திருக்கயிலாய ஞான உலாவை சிவபெருமான் முன்னிலையில் அரங்கேற்றினர்.

பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை,

பேரிளம்பெண் எனப்படும் எழுவகைப் பெண்களும் தலைவனைக்கண்டு விருப்புற்றுத் தங்கள் மன உணர்வைக் கூறுவதாக அமைந்தது இந்த ஞான உலா.

திரு.ஐ. வீரக்கோன் முதலியார் எழுதிய 'வெருகற் சித்திரவேலாயுதர் காதல்'' என்ற பிரபந்தத்தை அவர் பிரபந்த மரபைக் கடந்து புதுமையாக அமைத்துள்ளார்.

பாட்டுடைத் தலைவனாகிய சித்திரவேலாயுதப் பெருமான் வெருகலம்பதியிலிருந்து தமது தாய் தந்தையராகிய மாதுமை அம்பாள் சமேத கோணேசப் பெருமான் அமர்ந்துறையும் திருக்கோணேஸ்வரத்திற்கு தமது பரிவாரங்களுடன் செல்வதை உலா என்னும் பிரபந்த வகையில் பாடியிருக்கிறார். கோணேஸ்வரத்திலிருந்து வெருகலம்பதியை அடையும்போது வழியில் பூஞ்சோலையில் இருந்த முத்துமோகனப் பெண்ணின் காதலை திரிகூடராசப்பக் கவிராயர் பாடிய திருக்குற்றாலக் குறவஞ்சி போல குறவஞ்சி இலக்கண மரபுக்கமைய சித்திரவேலாயுதக் காதலை குறவஞ்சி போலப்பாடியிருக்கிறார். இது ஒரு புதுமை.

முத்துமோகனப் பெண் சிந்திர வேலாயுதர் மேற்கொண்ட காதலால் ஏற்பட்ட விரகதாபம் அப்பரடிகள் அருளிய ஒரு தேவாரத்தை நினைவுபடுத்துகின்றது.

> "முன்னம் அவனுடைய நாமங்கேட்டாள்.................. நங்கை
> தலைவன்தானே'' (திருவாரூர்த் திருத்தாண்டகம் ஆறாம் திருமுறை 7ஆம் பாடல்)

குறி சொல்லும் குறத்தி இந்நூலை குறவஞ்சியாக்கிறாள் இந்நூலில் லௌகீகக் காதல் வெளிப்படையாகப் பேசப்படுகின்றது. தெய்வீகக் காதல் உட்பொருளாக வைக்கப்பட்டிருக்கின்றது.

இத்தகைய அற்புதப் பிரபந்தத்தில் காதல்கொண்டு மோகம்மடைந்த டாக்டர். நா.கணேசலிங்கநாதன் அவர்கள் உடல் நோயைத் தீர்க்கும் மருத்துவர் மாத்திரமல்ல உள்ளத்து நோய்க்கும் ஞானாமிர்தம் அளிக்க வல்லவர். அவருடைய எண்ணங்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். எனவே இந்தவித சாதனையும் போதனையும் தொடர சித்திர வேலாயுதப் பெருமான் அருள் புரிவாராக.

**ஞானசிரோன்மணி,**
**பண்டிதர். இ. வடிவேல்**

**15, வித்தியாலயம் ஒழுங்கை,**
**26.04.2004.**

# வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தான தலைவர் உரை

தெட்சண கைலாயம் எனப் போற்றப்படும் திருக்கோணமலை மாவட்டத்தின் இறுதி எல்லையாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரம்ப எல்லையைக் கொண்டதுமான அதாவது மகாவலி கங்கையின் ஒரு கிளையாம் வெருகல் கங்கை இரு மாவட்டங்களுக்குமிடையிலே கிழக்கே ஆர்ப்பரிக்கும் கடலோடு சங்கமிக்கும் சிறப்பினைக்கொண்ட பகுதியிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் தேவஸ்தானம் அமைந்து அடியார்கட்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கின்றது. இப்பெருமான்மீது காதல்கொண்ட தம்பலகமத்தைச் சேர்ந்த ஐ.வீரக்கோன் முதலியார் அவர்கள் வெருகலம்பதியின்மீது காதல்கொண்டு 1686ம் ஆண்டு பெருமானின் சிறப்புத் தலமமைந்துள்ள சுற்றுப்புறச்சூழல் போன்ற சிறப்புக்களைப் பாடல்கள் மூலம் எழுதி வெளியிட்டிருந்தார்கள். இது பாமர மக்கள் மத்தியிலே எந்தளவு தூரம் அறிமுகமாகியிருக்கும் என்பது கண்கூடு. அத்தோடு அப்பாடல்களின் கருத்துக்களும் பாமர மக்களுக்கு விளங்காத புதிராகவே இருந்திருக்கும். இந்நூல் பெறுமதி மிக்கதும், பழமை வாய்ந்ததுமானது எனக் கருதியது இந்துக் கலாசாரதிணைக்களம். திருக்கோணமலையைப் வசிப்பிடமாகக்கொண்ட பண்டிதர் ஞானசிரோன்மனி வடிவேல்ஐயா அவர்கள் விளக்கவுரையுடன் வெளியிட்டுள்ளார். இவ்விடயம் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். 'வெருகல் சித்திர வேலாயுதர் காதல்' நூலை மிகவும் இலகு தமிழிலே பண்டிதர் தொடக்கம் பாமரர்வரை கற்றறிந்துகொள்ள வேண்டும் என்ற எண்ணமேநோக்கத்தினால் கையடக்கமான வசன நடையிலேயே பதிப்பித்து வெளியிட முன்வந்துள்ள வைத்திய கலாநிதியும், முருக பக்தரும், சைவசமய மேம்பாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டுவரும் திரு.நா.கணேசலிங்கநாதன் அவர்களின் இச்செயல் பாராட்டப்பட வேண்டியதாகும். அதுமட்டுமன்றி ஒரு வைத்தியர் இப்படி ஆத்மீகப் பாதையில் தம்மை முழுமையாக

அர்ப்பணித்திருப்பது எம்மை வியப்படையச் செய்கின்றது. இப்பதிப்பு எல்லோரதும் கரங்களிலும் தவழும் என்பதில் சந்தேகமில்லை. எமது வெருகல் சித்திரவேலாயுதர் காதற் பாக்களை முழுதாக வசன நடையிலே அமைத்துதவிய வைத்தியக் கலாநிதி திருவாளர் நா.கணேசலிங்கநாதன் அவர்கட்கு வெருகலம்பதி அருள்மிகு சித்திரவேலாயுதர் பரிபாலன சபை சார்பிலே எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு மேலும் சைவத்திற்கும், தமிழிற்கும் உங்கள் சேவை தொடர வாழ்த்துகிறேன். இத்துடன் புட்பவிதி என்ற நூலும் இணைந்துள்ளது. காலத்துக்கு உகந்தது ஒன்றாகும்.

நன்றி

**த. சிதம்பரப்பிள்ளை அதிபர்,**
**66, நீதிமன்ற வீதி,**
**திருக்கோணமலை.**

# தி/மா/இ/ இ/பேரவைச் செயலாளர்
# வாழ்த்துரை

தேவாரம் பாடப்பெற்ற தெய்வத் திருநகராம் திருக்கோணமலையிலும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் சைவப் பேரறிஞர்களும், தமிழ் அறிஞர்களும் காலத்துக்குக் காலம் தோன்றி சைவப்பணியும் தமிழ்ப்பணியும் புரிந்துள்ளனர் என்பதை எமது வருங்காலச் சந்ததியினர் அறிந்து கொள்வதற்கு ஆதாரமான ஆவணங்களுள் நூல்களும் முக்கிய இடத்தை வகிக்கின்றன என்றால் அது மிகையாகாது.

மேற்கூறிய கூற்றுக்கு அமைவாக தம்பலகமத்தைச் சார்ந்த பெரியார் திரு. ஐ. வீரக்கோன் முதலியார் அவர்கள் 1686ம் ஆண்டில் "வெருகற் சித்திரவேலாயுதர்காதல்" என்ற நூலை ஆக்கியுள்ளார் என்பதை இலக்கிய ஆர்வலர்களும், சைவப் பெரியார்களும், க.பொ.த உயர்தர வகுப்பு மாணவர்களும் நன்கறிவார்கள்.

இத்தகைய கவி நயமும் சொல் நயமும், பொருள்நயமும் மிக்க சித்திரவேலாயுதர் காதலை நம் வைத்திய கலாநிதி திரு.நா. கணேசலிங்கநாதன் அவர்கள் பூநகர் அருள்மிகு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சென்றவருடம் நடைபெற்ற எமது பேரவையின் வேல் நடை பஜனைக்குழுவின் நடைபஜனை நிகழ்வின்போது நண்பன் திரு.ந. செல்வஜோதி அவர்கள் (ஸ்ரீ முருகன் தொண்டர்சபை), திரு.மா.இ.இ. பேரவையின் வேல் நடை பஜனைக்குழு இரண்டினதும் மதிப்பார்ந்த செயலாளர்) சித்திர வேலாயுதர் காதலைப்படிக்கவும் வைத்திய கலாநிதி திரு. நா. கணேசலிங்கநாதன் அவர்கள் பயன்சொல்லவும் அருகிலிருந்து கேட்டு ஆனந்தடைந்தோம்.

இந்த நிகழ்வானது அருள்மிகு வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தில் தீர்த்தோற்சவத்துக்கு முதல்நாள் நிறைவுற்றது. எல்லாம் வல்ல கலியுகக் கந்தனான வெருகலம்பதியானின் திருவருள் என்றே கருதுகின்றோம்.

வெருகல் சித்திரவேலாயுதர் காதலில் அளவற்ற பக்திகொண்ட சிறந்த சிவபக்தரும் ஆசாரசீலருமான வைத்தியகலாநிதி

திரு.நா.கணேசலிங்கநாதன் அவர்கள் திருக்கோணமலையிலே சைவசமய வளர்ச்சிக்கு அமைதியாக இருந்து தொண்டாற்றி வருபவர், அன்னாரின் வழியில் அவருடைய மனைவி திருமதி. பவளராணி அவர்களும் சமயப் பணியில் தம்மை ஈடுபடுத்தி வருவதை நாம் அனைவரும் நன்கறிவோம்.

வெருகலம்பதியானின் திருவருளால் உந்தப்பட்டு "சித்திரவேலாயுதர் காதலை" வசன நடையில் எமக்கு விருப்புடன் அளிக்கும் திரு.நா.கணேசலிங்கநாதனின் அரிய முயற்சி வெற்றியடைய வேண்டும் என வாழ்த்துவதோடு இப்பெரியார் இதுபோன்ற இன்னும் சில படைப்புக்களை உருவாக்கித் தரத் திருவருள் பாலிக்க வேண்டுமெனத் திருக்கோணமலைப் பெருமானையும், வெருகலம்பதியானையும் சிரம்தாழ்த்தி வேண்டுகின்றோம். இத்துடன் புட்பவிதி என்ற நூலும் இணைக்கப்பட்டுள்ளது சிறப்பு அம்சமாகும் என்பதையும் தெரியத் தருகிறேன்.

"சிவஞானச் செல்வர்"
செல்லப்பா சிவபாதசுந்தரம்
மதிப்பார்ந்த பொதுச்செயலாளர்
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை.

தி.மா.இ.இ. பேரவை,
294/1, உட்துறைமுகவீதி,
திருக்கோணமலை,
07.06.2004

# கௌரவ தலைவர் வாழ்த்துரை

திருஞானசம்பந்தரால் தேவாரம் பாடப்பெற்றதும் அகத்தியர், நக்கீரர் ஆகியோரால் துதிக்கப்பட்டும் வந்த தெய்வமணம் கமழும் திருக்கோணேஸ்வரர் வீற்றிருக்கும் திருக்கோணமலை மாவட்டத்திலேயே வெருகலம்பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலயம் சகல வசதிகளும் அதாவது மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்று அன்று தொடக்கம் இன்றுவரை அடியார்களுக்கு அருள்சுரந்துகொண்டு இருக்கிறது. இங்கு கருவறையில் வீற்றிருக்கும் பஞ்சலோக மூர்த்தியும் விசேட பெருமை தருவதாகும்.

இப்பேர்ப்பட்ட பெருமைக்குரிய ஸ்ரீ சித்திரவேலாயுதர் சுவாமி மீது பக்தி கொண்டு தம்பலகமத்தைச் சார்ந்த ஸ்ரீ மான்.ஐ.வீரக்கோன் முதலியார் 1686ம் ஆண்டளவில் வெருகற் சித்திரவேலாயுதர் காதல் என்ற பிரபந்தத்தை அன்பின் மிகுதியால் இயற்றியுள்ளார் என்று அந்நூலின் செய்யுள்களில் இருந்து அறியலாம்.

இது இப்படியிருக்க கடந்த அறுபத்தி நான்கு ஆண்டுகளாக வடக்கே இருந்து தெற்கில் உள்ள கதிர்காமத்திற்கு புனித வேலை ஏந்தி யாத்திரைக் கூட்டத்தினருடன் யாத்திரை செய்த வேல்ச்சாமி (முத்துக்குமாரு) என்பவர் திருமலையூடாக மூதூர் சென்று வெருகலம்பதியில் தங்கி பின்னர் கதிர்காமத் தீர்த்தம் ஆடுவது வழக்கம். ஆனால் 1990ல் வழமைபோல் யாத்திரை செய்து திருமலைக்கு வந்தபோது வன்செயல் காரணமாக இங்கு இருந்து யாத்திரை தொடரமுடியவில்லை. என்விருப்பப்படி தி/மா/இ/இ/பேரவையின் மதிப்பார்ந்த செயலாளர் செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்களிடம் கதைத்து பேரவையில் புனித வேலையும் வீரபத்திரரையும் வைத்தோம். அப்பொழுது வேல்ச்சாமியார் உங்களுக்கு நம்பிக்கையான ஒருவர் வரும்போது இந்த வேலை யார்த்திரையாக கதிர்காமத்திற்கு எடுத்துச் செல்லுங்கள் என்று கூறினார். அதன் பின்னர் நித்திய நைமித்திய பூசை வேலுக்கு செய்ய எண்ணி அன்புவழிபுரம் ஸ்ரீ ஞானவயிரவர் ஆலயத்தில் அதற்குரிய கருமங்கள் செய்து வைத்தோம்.

அதன் பின்னர் தி/மா/இ/இ/பேரவையின் முடிவுக்கு ஏற்ப 2000ம் ஆண்டில் வெருகலம்பதி தீர்த்த உற்சவத்திற்கு யாத்திரையாக கொண்டு செல்லவும், அதற்கு ஒரு வேல்நடைப் பஜனை குழுவும் அமைக்கப்பட்டது.

அதன்படி யாத்திரை கால்நடையாக நாலு ஐந்துநாள் கிராமங்கள் ஊடாக சென்று தீர்த்தம் ஆடுவோம். அப்போது நடைபாதையில் ஆத்மீக நெறிகளுக்கு ஏற்ற பாக்களை பஜனைக் குழுவினர் பாடுவார்கள் இரவில் நாம் தங்கும் ஆலயங்களில் பக்திநெறி அறநெறி போன்ற இறைவழிபாட்டுக்குத் தேவையான நிகழ்ச்சிகளை, தெய்வீக வழிபாட்டுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயற்சிப்போம்.

அப்போதே ஸ்ரீ சித்திர வேலாயுதர் காதல் என்ற பிரபந்தம் வெருகலம் பதியானின் கிருபையால் கிடைக்கப்பெற்றோம். அதனை திரு வைத்திய கலாநிதி நா.கணேசலிங்கநாதன் இப்பிரபந்தத்தை படித்துப் பயன்சொல்ல வேண்டும் எனச் சொல்ல அதற்கு ஏற்றவாறு பூநகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் திரு.ந.செல்வஜோதி (ஸ்ரீமுருகன் தொண்டர்சபை) தி/மா/இ/இ/பேரவையின் வேல்நடை பஜனைக்குழு ஆகியவற்றின் மதிப்பார்ந்த செயலாளர்) அவர்கள் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல் என்ற பிரபந்தத்தைப்பாட திரு. நா. கணேசலிங்கநாதன் ஐயா அவர்கள் பண்டிதர் தொடக்கம் பாமரமக்களும் விளங்கக்கூடிய முறையில் பயன்சொல்ல நாமும் ஆலயத்தில் இருந்தோரும் கேட்டு மகிழ்ந்தோம். பின்னர் வெருகலம்பதியிலும் பாடப்பெற்று பயன் சொல்லப்பட்டது.

திரு.நா. கணேசலிங்க நாதன் ஐயாவின் விடாமுயற்சியால் இப்பேர்ப்பட்ட பிரபந்தத்தை பாடலில் இருந்து எல்லோரும் கேட்டு வாசித்து பயன் அறியக்கூடியதாக வசன நடையில் புத்தக உருவில் தருவதை எல்லோரும் பாராட்ட வேண்டும். எல்லோரும் ஒவ்வொரு புத்தகத்தை தமது வீட்டில் வைத்திருக்க வேண்டும். சைவ மக்கள் இப்பேர்ப்பட்ட பெரியார்களைப் புகழவேண்டும். அவரின் முயற்சி எல்லோரிடமும் விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். அனைத்திற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வணக்கம்**

**நன்றி**

சி. அபிமன்னசிங்கம்,
அமைப்புச் செயலாளர்,
தி/மா/இ/இ/பேரவை

தலைவர்,
ஸ்ரீ ஞானவயிரவர் ஆலயம்,
அன்புவழிபுரம்

# கௌரவ செயலாளரின்

# வாழ்த்துரை

கௌரவ செயலாளர்,
பாதயாத்திரை பஜனைக்குழு

அறுபது வருடங்களாக திருக்கோணமலை பெரியார் முத்துக்குமார சுவாமி (வேல்சாமி) அவர்கள் புனித வேலுடன் கதிர்காமத்திற்கு பாதயாத்திரை மேற்கொண்டு வந்தார். தனது இறுதிக் காலத்தில் பாதயாத்திரை செய்ய முடியாத காரணத்தால் புனித வேலை தி/மா/இ/இ/பேரவையிடம் ஒப்படைத்து கதிர்காமத்திற்கு யாரும் பாதயாத்திரை செய்தால் இவ்வேலுடன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டார். புனிதவேல் அன்புவழிபுரம் ஞானவைரவர் ஆலயத்தில் வைத்து பூஜிக்கப்பட்டுவருகின்றது. கதிர்காமத்து பாதயாத்திரைசெல்ல பலமுறை முயன்றும் முடியவில்லை.

இப்புனித வேலுடன் வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்துக்கு பாதயாத்திரை மேற்கொள்ள தி/மா/இ/இ/பேரவையின் பாதயாத்திரை பஜனைக்குழுவினர் முன்வந்தனர். இதனால் 2000ம் ஆண்டு அருள்மிகு திருக்கோணேசர் ஆலயத்திலிருந்து ஸ்ரீ வெருகலம்பதி சித்திரவேலாயுதர் ஆலயத்தைநோக்கி புனித வேலுடனும், வீரபத்திரருடனும் பாதயாத்திரை மேற்கொள்ளப்பட்டது. நான்கு நாட்கள் பல ஆலயங்களை தரிசித்து வெருகலம்பதி ஆலயத்தை சென்றடைந்தோம். 2001, 2002ம் ஆண்டுகளிலும் புனித யாத்திரையை திருக்கோணேசர் ஆலயத்திலிருந்து ஆரம்பித்து வெருகலம்பதி சென்றடைந்தோம்.

2003ம் ஆண்டு பாதயாத்திரையை ஆரம்பித்த பொழுது எமது பாதயாத்திரைக் குழுவின் முன்னாள் செயலாளர் வைத்திய கலாநிதி.நா.கணேசலிங்கநாதன் ஐயா அவர்கள் இப் பாதயாத்திரையின்போது ''ஸ்ரீ சித்திரவேலாயுர் காதல்'' என்னும் பிரபந்தத்தைப் படித்து பொருள் சொல்லப்படவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். எமது குழுவும் இவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டது. ஆரம்பத்தில் பெரியவெளி சித்தி விநாயகர் ஆலயத்தில் பாடலுக்கு, பொருள் சொல்லும் பணியை ஆரம்பித்தோம். வைத்திய

கலாநிதி.நா. கணேசலிங்கநாதன் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நானும் அப்பாடல்களை பாடும் பணியில் ஈடுபட்டேன்.

திரு.நா.கணேசலிங்கநாதன் ஐயா அவர்கள் பொருள் விளங்கக்கூடியதாக பாடல்களைப் பிரித்து அதன் பயனைக் கூறியபொழுது எல்லோரும் பெருவியப்படைந்தோம். தமிழ்ப் பற்றும், சமயப்பற்றும் கொண்டு மற்றவர்கள் விளங்கக்கூடியதாக பயன் கூறுதலும் மிகவும் சிறப்பாகவிருந்தது. ஆனால் ஸ்ரீ சித்திரவேலாயுதனார் காதல்'' என்னும் நூல் அனைவருக்கும் கிடைக்கக்கூடியதாக இருக்கவில்லை. இதன் நோக்கத்தை உணர்ந்து இந்நூலை இலகு வசன நடையில் எழுதி, இன்று எல்லோர் கைகளிலும் கிடைக்கக்கூடியதாக வெளியிட்டுள்ளார்கள். வைத்திய கலாநிதி நா.கணேசலிங்கநாதன் ஐயாவை பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த அருமையான நூல் எல்லா இந்து மக்கள் இல்லத்திலும் இருக்க வேண்டிய பழம்பெரும் பொக்கிஷமாகும். இந்நூலை வாங்கி தமது இல்லத்தில் தமது சந்ததியிடம் ஒப்படைப்பதுவும் அல்லாமல் குழந்தைகளையும் இப்பாடல்களைப் பாடி, பயனும் அறிந்துகொள்ள வைப்பதும் சைவப் பெற்றோர்களின் தலையாய கடமையாகும். அன்னாருக்கு ஸ்ரீ வெருகல் சித்திரவேலாயுத சுவாமியின் நல்லருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

ந. செல்வஜோதி,
தி/மா/இ/இ/பேரவையின்
பாத யாத்திரை பஜனைக்குழு

# என் உரை

வெருகல் பதி ஸ்ரீ சித்திரவேலாயுதர் மகிமையும் அற்புதங்களும் நிறைந்தவர். இரண்டாயிரம் (2000) ஆண்டு திருக்கோணமலையிலிருந்து வெருகற்பதிக்கு புனித வேலுடன் பாதயாத்திரை முதன்முதல் மேற்கொள்ளப்பட்டது. அடக்கமான, அருளும் அமைதியுமான புனித யாத்திரை. வேலவரின் புகழ்ப் பாக்கள் பாடப்பட்டு, நாமாவளியும் புகழ்ப் பாடல்களும் வீதிதோறும் கிராமந்தோறும் உணர்வுபூர்வமாகப் பாடப்பட்டன. மூன்று நான்குநாள் கால்நடையாகச் செல்லும் மார்க்கங்களின் இரவு நேரத்தில் வேலவனை சிந்திக்க நல்ல அமிர்தம் போன்ற வெருகல் சித்திரவேலாயுதர் காதல் என்னும் பிரபந்தம் கிடைத்தது. அதன் செய்யுளை ஒருவர்பாட மற்றவர் பயன்கூறி வந்தார். இப்பாடல்கள் எல்லாம் நாட்டுவளம், அக்காலத்து வழக்கம், பழக்கம், மக்களிடையேயிருந்த நம்பிக்கை தேசவழமை முதலானவற்றைக் கொண்டிருந்தது. செய்யுளாக இருப்பதைப்பொருள் அறிந்து இலகுவாக மனதில் பதிக்கவும், தமிழ் மக்களிடையே எமது பாரம்பரியங்கள் எப்படி அமைந்திருந்தது என்பதையும் வருங்கால சந்ததியினருக்கு ஏற்றமுறையில் இலகுவில் விளங்கக்கூடிய முறையில் வசனநடையாக்கியுள்ளேன். செய்யுள் இலக்கியத்தின் வசன நடையை மூலத்தில் இருந்தும் வழுவாது ஆக்கியுள்ளேன். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும் முருகன் இதனையும் உகந்து ஏற்பான். எனவே தமிழ் மக்களும் இதனை உகந்து ஏற்பார்கள்.

அக்காலத்தில் வெருகற்பதியின் சிறப்புக்கள் கால தேய வழக்கங்கள் எவ்வாறு போற்றப்பட்டன என்பதற்கான சான்றாக இந்நூல் இலங்குகின்றது. கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் வெருகற்பதியுடன் நெருங்கிய அன்பு பூண்டுள்ளான் என்பதையும், அவனால் வழங்கப்பட்ட மானியங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இது ஒன்றே இன ஐக்கியத்தையும் மத ஒற்றுமைப் பண்புகளையும் எடுத்துக் காட்டுகின்றது. திருக்கோணமலையின் எல்லையிலுள்ள மூர்த்தி தலத் தீர்த்தச்சிறப்பு பொருந்திய வெருகல் சித்திரவேலாயுதர் தன் அருட்பார்வையால்

இலங்காபுரி மக்கள் எல்லோரையும் அருளாட்சி செய்துள்ளார். யாத்திரையின்போது இனமத பேதமின்றி எல்லோரும் வெருகல் பெருமானை நினைவுகூர்வதையும் காணிக்கைகளை வழங்குவதையும் அறியக்கூடியதாக உள்ளது. ஆண்டுக்கு ஒரு பெருவிழாவாகக் கொள்ளக்கூடியதாக தீர்த்தத் திருவிழா அமைந்துள்ளது. பாக்களாக அமைந்த இந்த நூல் எல்லோரும் படித்து இன்புறும் வகையில் அமைய வேண்டும் என்ற பெருவிருப்பாலும் தமிழ் ஆர்வத்தாலும் இதனை எழுத எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திரவேலாயுதப் பெருமான் தெய்வசக்தியாக நின்று வழிநடத்தியுள்ளார். இத்துடன் புட்பவிதிநூலும் இணைந்துள்ளது.

இந்நூலை வெளியிடுவதற்கு ஆசியுரை, அணிந்துரை, நூல்அறிமுகம் தந்த பெரியோர்களுக்கும், தி/மா/இ/இ/பேரவையின் வேல்நடை பஜனைக்குழு, தலைவர், செயலாளர், பொருளாளர், மற்ற உறுப்பினர்களுக்கும் இந்நூலாக்கத்திற்கு வேண்டிய ஆலோசனைகளை நல்கிய எனது அன்பு பாரியார் திருமதி. பவளராணி அவர்களுக்கும், இந்நூலின் உருவாக்கத்துக்கு உற்சாகமூட்டிய திருக்கோணேசர் ஆலய பரிபாலன சபையில் பதில் செயலாளர் திரு.க. வல்லிபுரம் அவர்கட்கும், குறுகிய காலத்தில் சிறந்த முறையில் இந்நூலை அச்சிட்டு உதவிய ரெயின்போ அச்சக உரிமையாளர் திரு.சி.சிவபாலன் மற்றும் ஊழியர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். இவ்வுலகில் என்னை சகல விதத்திலும் அறிவூட்டி நெறிப்படுத்திய எனது அன்புப் பெற்றோர். திரு. கா. நாகரத்தினம், திருமதி. மஹாலட்சுமி அம்மா அவர்களுக்கு இந்நூலை வெருகல் பெருமான் திருவருள் துணையுடன் சமர்ப்பணம் செய்கின்றேன்.

வைத்திய கலாநிதி நா. கணேசலிங்கநாதன்,
70, திருமால்வீதி,
திருக்கோணமலை.

# காப்பு

## விநாயகர் துதி

சிறப்பும் மன இனிமையும் நிறைந்த திருக்கோணேஸ்வரத்தின் தென்பாலுள்ள வெருகற் பதியில் கோயில் கொண்டு அருளாட்சி புரியும் சித்திர வேலாயுத வேள்மீது அழகான செந்தமிழ்ப் பாக்காளற் காதற் கதையைப் பாடுவதற்கு மார்புக் கச்சை வரிந்து கட்டிய அம்பிகை பெற்றெடுத்த கணபதியின் பாதங்கள் துணை.

## நூல்

## விநாயகர்துதி

சிறப்புடைய வெருகற்பதி வேலாயுத வேள்மீது மன இனிமை தரும் காதற் கதையைப் பாட கச்சிறுக்கிய தனங்களையுடைய வல்லபையை இடப் பாகமாய்யுடைய கணபதி பாதம் காப்பாம்.

## கோணேசர் துதி

தென்னிலங்கை அரசனான இராவணன் தென் கயிலாய கிரியைப் பெயர்க்கும் போழ்து தனது சிவந்த விரலால் ஊன்றிய பின் அவனுடைய சாமகானம கேட்டுவந்து அவனுக்கு நீண்ட ஆயுட் காலமும் சந்திரகாசம் என்னும் வாளும் கொடுத்த திருக்கோணேசப் பெருமானது தாள் எந்நாளும் துணையே.

## மாதுமை அம்மை துதி.

செம்மை நிறம் பொருந்திய வெருகல் நகர் சித்திர வேலாயுத வேள்மீது பூவுலக மக்கள் இன்புற இனிமையான காதற் கதையைப் பாட மைதீட்டிய விழியும் கருமையான கூந்தலும் பெண்யானையின் நடையும் ஒத்த அன்னையாம் மாதுமையின் பாதங்களை வணங்கிப் போற்றுவோம்.

## சித்திர வேலாயுதர் துதி

ஒளிபரவும் ஈசானம் தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், அதோமுகம் என்னும் ஆறு திருமுகங்களையுடைய பெருமானது பொன்மயமான பாதங்களை ஒரு நாளும் மறக்க மாட்டேன்.

## வீரவாகு தேவர் துதி

சிங்க ஏற்றின் வலிமை நிகர் பானு கோபனை முன்னாளில் அழித்த வாளைக் கையிலேந்திய வீரவாகு தேவரது பாதங்களை பணிந்திடுவோம்.

## ஸ்ரீ கிருஷ்ணர் துதி

இரத்தினங்களினின்றும் ஒளிக்கற்றையானது மிளிரும் கோபுரத்துடன் கூடிய கோயில் வெருகற்பதியிலுள்ளது. அங்கு அருளரசாட்சி செய்யும் வேலவரின் மீது அன்புடனே இனிமையான காதற் கதையை சொல்ல காயாம்பூமேனி வண்ணனது வாசனை கமழும் பொற்பாதங்களை எந்நாளும் தியானித்திருப்போம்.

## சரஸ்வதி துதி

வெருகற்பதியில் இனிதாயுறையும் வேலாயுத வேள் மீது காதற் கதையைச் சொல்ல சிவந்த கரத்தில் ஏடும், படிக மாலையும் ஏந்திய கலைகளுக்குத் தெய்வமான கலைமகளை வணங்குவோம்.

## நீலாப்பளை பத்தினியம்மை துதி

செம்மஞ்சள் கதிர் ஒளி பரவும் கோபுரத்தையுடைய கோயிலில் உள்ள வெருகற் பதி வேலாயுத வேளின் மேல் காதற் கதையைப் பாட மேகங்கள் கூட்டமாக தவழ்ந்து செல்லும் உயர் சோலைகள் சூழ்ந்த மாட்சிமையதான நீலாப்பளையில் கோயில் கொண்ட பிறைபோன்ற நெற்றியையுடைய கண்ணகித் தாயின் இரு பாதங்களை வணங்குவோம்.

# அவை அடக்கம் [ வணக்கம் ]

சூரபதுமனை ஒளி பொருந்திய வேலால் அழித்தவர் அவர் மீது காதற்கதை பாட எனக்கு அருள்பாலிப்பார். இப் பூமியில் செந்தமிழை நயம்படக் கற்றுணர்ந்தோரையும் மற்றும் பெரியோர்களதும் திருவடிகளை வணங்குவோம். குளிர்ந்த சந்திரன் தன் நிலா ஒளியை இப் பூமி எங்கும் பரப்பி நிற்கும், அதைப் பார்த்த மின்மினிப் பூச்சியும் வெளிவந்து ஒளிபரப்பும் பான்மை போலவும், அழகு நிறைந்த சேவல் தனது இறக்கைகளை அடித்துக் கூவுதல் கண்ட மாடப்புறாவும் கூவுதல் போலவும் அன்னத்தின் நடை இது என காகமானது நடந்து பெண்களுக்குக் காட்டிய தன்மைபோலவும் இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழை நன்கு கற்றுத் தெளிந்த புலவர் முன்னே, சிறிய அறிவினால் இக் காதற் கதையைக் கூறத்தொடங்கியுள்ளேன். எனவே கற்றுணர்ந்த பெரியோர்கள் குற்றங்களை விலக்கி குணமாகக் கொள்வது அவர்களது தலையாய கடமையாகும்.

## சித்திர வேலாயுதர் காதற் சுருக்கம்

கபோல மதம் பொழியும் யானை மீது ஏறி சித்திர வேலாயுத வேள் தெரு வீதி உலாப் போவதை, வில் போன்று வளைந்த நெற்றியும் சேல் போன்ற கண்களையுடைய முத்து மோகனப் பெண் இதைக்கண்டு மயக்கமுற்றாள். கலசம் போன்ற பயோதரங்ளையுடைய அம் மாது மயக்கமுற அவளைப் பூங்சோலையில் கலந்து கூடியதன் பின்னர் குறத்தி வருகிறாள். அவள் அப் பெண்ணின் அங்க இலட்சனங்களை அறிந்து குறி சொல்லுகிறாள். குறமாது கூறிய குறிப்பின் படி தன்மென்மையான பசிய கிளியை வேலவரிடம் தூது அனுப்பினாள் முத்து மோகனப் பெண். கடப்பம் பூஞ்சோலை சூழ்ந்த தென் வெருகற் பெருமான், கிளியிடத்து தன் கடப்ப மாலையைக் கொடுத்தார். கிளி அதனைப் பெற்றுக் கொண்டு முத்து மோகனப் பெண்ணிடம் கொடுத்தது. இத் தன்மைகளையெல்லாம் பூரணமாக எடுத்துக் கூற முடியாது எனினும் சிறப்பான செந்தமிழால் சிறிதளவு சொல்கிறேன்.

## நூலாசிரியர் வரலாறு

மதகுகளின் வழியே நீா் பரந்து பாயும் வளம் பல மிகுந்த தம்பல காமப் பகுதியில் சிறப்புப் பொருந்திய வேளாண்மை செய்யும் குடி மரபில் பிறந்தவர் ஐந்து திருமுகங்களையுடைய சிவபிரானை நினைத்து செய்யப்பெற்ற தவத்தின் பயனாக வந்து பிறந்தவர் சிவந்த மென்மையான பாதங்களையுடைய சித்திரவேலாயுதப் பெருமானைப் போற்றி வணங்கி வரும் பக்தன். அவன் சால்பு நிறைந்த வாய்மை நெறியாளன். பெயர் வீரக்கோன்முதலி.

ஒப்புவமை கூறமுடியாத ஒளிபரவும் வேற் பெருமாள் மீது கூறும் இக் காதற் கவிதையை பழமை பொருந்திய உலகிலுள்ள மக்கள் எல்லோரும் நல்லதெனக் கொள்வார் என நம்பிச் சொல்கிறேன்.

## வெருகற் பதிச் சிறப்பு

அழகு மிகுந்த கண்டி நகரை ஆட்சி செய்யும் இராசசிங்க மன்னன் சூரிய குலத் தோன்றலன். எட்டுத்திக்கு மக்களாலும் போற்றப்படுகின்றவன். கூரியகை வாளால் பகைவர்களை அழித்துவிடுவான். பூமியில் இரத்தம் ஆறாகப் பாயும். அது மகாவலிகங்கையைப்போல பாயும் ஆற்றுப் பிரவாகம், சிங்கம், யானை, குரங்கு, கொல்லும் குணமுடைய புலி, முதலாய காட்டு மிருகங்களை தள்ளி உருட்டி கடலில் செல்லவிடும் இத் தன்மை கொண்ட மகாவலியாற்று கரையின் கண்ணேயுள்ளது வெருகற்பதி. வெருகற்பதியின் கண்ணே கரும்பும், கமுகும், வாழைகளும் மாமரங்களும் பலா மரங்களும் நிறைந்து செழித்து வளர்ந்து சோலையாகவுள்ளது. தென் திசையில் புனித நீா்பாயும் மகாவலி கங்கையையும் வடதிசையில் தாமரைப் பூந்தடாகமும் கிழக்குத் திசையில் பொங்கி ஆர்ப்பரிக்கும் கடலும் மேற்குத் திசையில் சோலைகளும், நெல் வயல்களும் அமைந்துள்ளன. இவ்வாறான அழகு பெற்ற பூமி, தேவர் உலகெனப் பிரகாசிப்பதால் வெருகற் பதியைப் பார்ப்பவர்கள் அதிசயமடைவார்கள்.

## சோதிடர் வரவு

சந்திரனையும் அறுகினையும் கங்கையையும் தன் ஜடா முடியில் சூடிய எல்லையற்ற ஈசன் சிவபெருமான் தந்தருளிய சித்திர வேலாயுத வேள் எட்டுத்திக்கும் ஏத்த திரு வீதியில் மிக மகிழ்ச்சியாக உலா வர திருவுளம் கொண்டார். வெற்றிச் சிறப்புடைய வீரவாகுவை நோக்கி தேர்ச்சியுடைய சோதிட வல்லுநரை இவ்விடம் அழைக்கும் படி திருவாய் மலர்ந்தருளினார். வீரவாகுவும் மிக நல்லதென ஏற்று சத்திய லோகம் சென்றார். எல்லாக் கலையும் கற்றுணர்ந்த நல்ல சோதிட ஞானமுள்ளவர்களை சந்தோஷத்துடன் வேலாயுத வேளின் முன்னே கொண்டு வந்தார். மன மகிழ்ச்சியுடன் சோதிடர்கள் வேற் பெருமான் முன்னின்றார்கள்.

மகிமை பொருந்திய வேற் பெருமான் சோதிடர்களின் முகத்தைப்பார்த்து பூமியிலே மிகுந்த புகழுக்குரிய சோதிடர்களே "உலாப் போவதற்கு நன் முகூர்த்தம் பார்க்கும்படி" கூறினார். அது போழ்து அன்பான சோதிடர்களை முக்காலத்தையும் கூர்ந்து ஆராய்ந்து நன்முகூர்த்தத்தை எடுத்துக் கூறினார்கள். இடப ராசிக்குரிய வைகாசிமாதம் 12ம் நாள் சோதி நட்சத்திரத்துடன் கூடிய திங்கட்கிழமையாகும். அன்று குரு ஒரையில் செல்லுதற்கான சூரியன் உதயமாகும் வேளை பவனிக்கு உகந்ததாகும் என உரைத்து நின்றனர். இவ்வாறு கூறிய சோதிடர்களுக்கு அளவுக்கதிகமான பொன் கொடுத்து அவர்களை அனுப்பி விட்டார். பின்பு தன்னை சூழ்ந்து நின்ற துணைவர்களது முகத்தைப்பார்த்து நீவீர் வெற்றி மிகுந்த யானைகளைக் கட்டும் பந்திக்குச் சென்று கஜ லட்சணத்திற்கு அமைவான உயரிய அங்கலட்சணமுள்ள வெற்றியுடைய வேழத்தை விரைவாகக் கொண்டு வரும் படி இயம்பினர்.

## திருவுலாவுக்கு உவாவை வரவழைத்தல்

இவ்விடயத்தை துணைவர்கள் யானைப்பாகர்களுக்குக் கூறியதும் அவர்கள் மிகு விருப்புடன் எழுந்தார்கள். அங்குசத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, விரைவாக யானைப் பந்திக்குச் சென்றார்கள். சிவந்த பவளம் போல் பிரகாசிக்கும் தந்தங்களையுடைய யானை ஒன்றைப் பிடித்து புதுப்புனல் ஓடும் மகாவலிகங்கையில் நீராட்டினார்கள். ஒளிரும்

முத்துக்களால் இழைக்கப்பட்ட முக படாத்தினை அணிவித்தார்கள். தந்தங்களுக்கு தங்கத்தாற் செய்த் கிம்புரியைப் பூட்டினார்கள். கால்களுக்கு கலீர, கலீர என ஒலிக்கும் வெண்டயங்களை அணிவித்தார்கள். காந்தருவம் வியக்கும்படியான பீதாம்பரப் பட்டை அணிவித்தார்கள். யானையின் முதுகை தேவர்களும் வியந்து புகழும்படி பெருமைபட அலங்கரித்தார்கள். சூரியனைப் போல் ஒளி பிரகாசிக்கும் ஆசனத்தை இலட்சணத்தில் பேதப்படாத யானையின் முதுகில் கட்டினார்கள். யானை நடந்து வரும் தன்மை மாமேருமலை அசைவது போன்றும் தத்வ குணம் நிறைந்த வெள்ளிமலை அசைவது போலவும் இருந்தது. . சித்திர சிற்பங்கள் வரிசையாகச் செதுக்கப்பட்ட கோயிலின் முன்பாக யானையை நிறுத்தி பெருமானை வணங்கி நின்றார்கள்.

## வீதி அலங்காரம்

மன இனிமை தரும் வெருகற்பதி வேலாயுத வேள் உலாவருகின்றார். எனக் கேள்வியுற்ற மக்கள் அன்புடன் வீதி அலங்காரம் செய்தனர். கம்பங்களை நடுவார்கள் ஆகாயத்தைத் தொடுமளவும் கொடிகளைத் தூக்குவார்கள். தூண்களை மாணிக்கக் கற்கள் கொண்டு அலங்கரிப்பார்கள். வளைகளை வைரங்களைக் கொண்டு அழகு செய்வார்கள். பந்தற் கூரைகளை ஆணிப் பொன் தகட்டால் அழகுற வேய்ந்தார்கள். வாசம் கமழும் பூக்களால் மாலை தொடுத்து பந்தலை அழகு செய்தார்கள். பந்தலின் வாயில் தோறும் புன்னை மரங்களையும் வாழை மரங்களையும் கமுகு மரங்களையும் அழகுற நாட்டினார்கள்.நறு மணம் வீசும் மல்லிகை, சண்பகம், தாமரை, கோங்கு முதலானவற்றால் மாலை தொடுத்து தூக்கினார்கள். தங்கக்குடங்களில் நீர் நிறைத்து பரிசுத்தமான மாந்தளிர் மேல் தேங்காய் வைத்து பூரண கும்பங்களை வைத்தார்கள். குளிர்ந்த நிலாவைப்போன்ற தோரணங்களையும் மஞ்சரிகளையும் தொங்க விட்டார்கள். அட்டமங்களப் பொருள்களையும் கண்ணாடியையும் முன்வைத்தார்கள். பூந்தாதுகளுடன் கூடிய நறுமணப் பொடிகளையும் தூவி அழகு செய்தார்கள். வாசமென் சாந்துகளையும் கஸ்தூரி சவ்வாது கலந்த பன்னீரையும் தெளித்தார்கள். இவ்வாறு வீதிதோறும் நறுமணம்ஊட்டி விட்டார்கள். குளிர்ச்சியான சந்திர முகத்து மங்கையர்களும் ஆடவர்களும் தேவ உலகத்தினர் வியக்கும் படி வீதிகளை அலங்கரித்தார்கள். மிகுந்த பலவானான வீரவாகு மிகு அன்புடன் விரைவாக வேலாயுத வேளிடத்து சென்று அவர் பாதங்களை

வணங்கி கோபுர வாசலின் முன்றில் உலாவரும் உவா நிற்கின்றது. வையாளி வீதியெல்லாம் வாகாய் அலங்கரித்துள்ளனர். மேற்கொண்டு செய்யவேண்டியதை தேவரீர் விருப்புடன் கூற வேண்டும் எனக் கேட்டுநின்றனார். தங்கம் போல் ஒளிகாலும் தாமரை ஆசனனாகிய நான்முகனை அழைத்து வரும்படி அறிவித்து நின்றார்.

## பிரமதேவர் செய்த வேள்வி

அது போழ்து வீரவாகு தாமரை மலராசனான பிரமனை அழைத்து வந்தார். பிரமனும் எம் பெருமானை வணங்கி வாழ்த்தி தெண்ட நமஸ்காரம் சமர்ப்பித்தான். பிரமனே பவனிஉலாப் போவதற்குரிய ஆகமச் சடங்குகளை இப்பொழுதே செய்ய வேண்டுமெனப் பணித்து நின்றார். புந்தி மகிழ்ந்த பிரமனும் குமார தந்திர நெறிப்படியே அக்கினி காரியங்களைச் செய்தான்.

தேவ உலகத்தினரும் அதிசயிக்கும்படி அறுகோண ஓம குண்டம் அமைத்து யாக வேதிகையின் மேல் பிரதம கும்பம் வைத்து அட்டதிக்குகளுக்கும் முறையாகக் கும்பம் வைத்து பூசைகளை விதிப்படி செய்தார். ஓம குண்டத்தில் அக்கினி தேவனை ஆவாகனம் செய்து தம்பழுது நீக்கிய வெண்ணெய்யைச் சொரிந்து கமலாக்கினியை அழகாகவே வளர்த்து பூரணாகுதி கருமங்களைப் பூர்த்தி செய்தார்.

## சித்திர வேலாயுத வேளின் அலங்காரம்

எம்பெருமானை அலங்காரம் செய்ய ஆயத்தமானார். தங்கத்தாலான ஆபரணங்களை அணியச் செய்தார். தகதக என ஒளி வீசும் பரிசுத்தமான பொன்னால் இயற்றிய உத்தரியத்தையும் இட்டார். சொல்லுதற்கரிய நாகரத்தினம் பதிதத் உதரபந்தணத்தைக் கட்டினார். மறு நீங்கிய மாணிக்கம் பதித்த நெற்றிச் சுட்டியை நெற்றிக்குக் கட்டினார். தலைக்கு சுத்த இரத்தினம் குயிற்றிய கிரீடத்தை அணிவித்தார். பத்தரை மாற்றுத்தங்கத்தால் இழைத்த நெற்றிப் பட்டத்தையும் அணிவித்தார். செம்பவளக் கைகளுக்கு காப்புகளையும் இட்டார். விரல்களுக்கு தங்க மோதிரங்களை அணிவித்தார். மாணிக்கம், மரகதப்பச்சை வைரங்கள் வைடூரியங்கள் ஆயிரத்தெட்டு வைத்து இழைத்த பதக்கத்தையும்

அணிவித்தார். பூமியில் எட்டு இடங்களில் கிடைக்கும் முத்துக்களையும் இருளை மாற்றி ஒளிரச் செய்யும் செம்மஞ்சள் தங்கத்தில் நவரத்தின மணிகள் வைத்துக் கோர்த்த பதக்கத்தையும் அணிவித்தார்கள். விண்ணுற்றிடு தேவர்களும் பூவுற்றிடு மக்களும் கண்களால் காணக் கூடியதாக அழகுறக் கோர்த்த பதக்கத்தை ஆறு ஆதாரங்களிலும் அன்பாகவே அணிவித்தார். வேறு அனேக வித பதக்கங்களையும் அணிவித்தார். அழகிய ஆம்பல் பூ மாலையுடன் பொன்மயமான மாலையையும் அணிவித்தார். தேவ நாட்டாருக்கும் கிடைத்தற்கரிதான முத்து மாலைகளையும், மணிமாலைகளையும் அணிவித்தார். செங்கடப்பமாலை வெண்கடப்பமாலை அனேகவித பூமாலைகளையும் அணிவித்தார். பாதங்களுக்கு ஒளிவிட்டுப்பிரகாசிக்கும் பொற்கொலுசுகளையும், பொற்சதங்கைகளையும் அணிவித்தார். ஆயிரம் கண்ணுடைய இந்திரன் நாணும் படியாக பிரமன் மிக அழகாக அலங்காரம் செய்தார். தென் வெருகற் சித்திர வேலாயுத வேள் இனிமையாக பொற்பீடத்தில் எழுந்தருளினார்.

## வேலாயுத வேளின் உலாச்சிறப்பு

கோணேச மாமலைக்குத் தென் திசைப்பக்கமாக மாட்சிமையுடைய வெருகற் பதியில் கோயில் கொண்ட வேற்பெருமான் சைவசமயம் தழைத்தோங்கவும் பூமியிலுள்ள ஜீவராசிகள் வளமாக வாழவும் செந்நெற்களனிகளெல்லாம் செழிப்புடன் விளைவு ஓங்கவும் மாதம் மாரி மூன்று குறைவு படாது பெய்யவும், பசுக்கூட்டங்களும் பட்டிகளும் செழிப்புடன் பெருகவும், தான தருமங்கள் செழிப்புறவும், பெருமை பெற்ற திருவெண்ணீறும் திருவைந்தெழுத்தும் உருத்திராக்கமும் சிறப்புறவும், பூமியில் உண்டாக்கப்பட்ட பொய்ச்சமயம் யாவும் சூரியனைக் கண்ட பனிபோல் மறையவும் வேற்பெருமான் இன்று பவனி வருகின்றார்.

## உலாக் காண வந்தோர்

இதனைத் தெரிந்த ஐந்து கரங்களையுடைய விநாயகப் பெருமானும், அழகுக்கு இருப்பிடமான கண்ண பெருமானும், இந்திரனும் தேவ உலகினரும், அட்டதிக்குப் பாலகரும், சந்திர சூரியரும், பெருமை

பெற்ற முனிவர்களும், எண்ணுக்கடங்காத பதினெண் கணத்தவரும் கண்கொள்ளாக் காட்சியாக இப்பவனியை பார்க்க வந்தார்கள்.

ஐயனார், வைரவர், வீரபத்திரர் முதலானவர்களும் தமக்குரிய ஊர்திகளில் இங்கு வந்தார்கள். மண்டலத்தை அரசு செய்யும் தலைவர்களும் எட்டுத்திக்கு அடங்கலுமுள்ளோரும் வந்தார்கள். வந்தவர்கள் சித்திர வேலாயுதப் பெருமானை மன மகிழ்ச்சியுடன் தெண்டனிட்டு வணங்கி நின்றார்கள். வணங்கியவர்களனைவருக்கும் தென் வெருகற் பெருமான் மிகுந்த அருளைப் பாலித்தார்.

## சித்திர வேலாயுதர் திருவுலா

யானை மீதிருந்த அழகு மிகு இரத்தின பீடத்தில் மேக வண்ணனாம் கண்ணனைப் போல் அழகு பிரகாசிக்க எழுந்தருளினார். தேவர்கள் புஸ்பாஞ்சலி செய்ய உலகோர் மனமகிழ்ந்து தெண்டனிட்டு வணங்கி வாழ்த்துக் கூறினார்கள். மக்கள் அழகான வண்ணக் கொடிகளைப் பிடித்தனர். ஒரு பக்கத்தில் பொன்மயமான கொடிகளைப் பிடித்தனர். பஞ்ச வண்ணங்கொண்ட பட்டுப் பீதாம்பரப் பொற்சரிகை அலங்கார வேலைப்பாடமைந்த குடைகளைக் கூட்டங் கூட்டமாகப் பிடித்தனர். நிலவின் ஒளியைப் போன்ற வெண்கொற்றக் குடைகளையும் தேவர்கள் விரும்பும் ஒளி பொருந்திய பொற் குடைகளையும் பிடித்தனர். இந்திர தனுப் போன்ற ஏழுநிறத்துடன் கூடிய இரத்தினங்களும் முத்துக்களும் வைத்து இழைத்த ஆலவட்டங்களைப் பிடித்தனர். விண்ணில் பிரகாசிக்கும் சூரிய சந்திரர் நிற்பது போல் விளக்குகளை கோடிக் கணக்கில் பிடித்தனர். யானைத் தந்தத்தில் செம்பவளத்தைக் கடைந்து தங்கப் பூண்களிட்ட சாமரைகளை இரட்டி வந்தனர். சந்திரப் பிறை போன்ற நெற்றியையுடைய மங்கையர்கள் கோடிக்கணக்கான சாமரைகளை வீசி வந்தனர். எல்லா இடங்களிலும் சங்கு, தவில், பம்பை, தடாரி முதலான வாத்தியங்கள் ஒலித்தன. இவ் ஒலி சமுத்திரம் போல் ஆர்ப்பரித்தது. இளமுலை மஙகையர்கள் கோலாட்டம் ஆடி, மாந்தளிர் போல் மேனி வியர்த்து நின்றனர். வில்போன்ற வளைந்த நெற்றிப்புருவ மாதர் ஒளி காலும் பொற்றட்டில் அழகாகக் கற்பூர ஆலாத்தி எடுத்தனர். மட்டற்ற மங்கையர் சிலர் பண்பாகப் பாக்களைப் பாடினர் சிலர் குற்றமற்ற பரதத்தை ஆடினர். களிற்றின் காலில் கட்டிய மணிகளின் சத்தம் ஆகாய மண்டலத்தையும் அதிரச் செய்தது. உலக நாயகியாம் மாதுமை மைந்தன் மயிலேறும் முருகன் கூரிய வேலாயுதத்துடன் உலா

வருகின்றான். என ஊது சின்னங்கள் முழங்கின. வேதத்தின் தலைவன் வந்தான் தேவசேனாதிபதி வந்தான் குற்றமற்ற இறைவன் வந்தான் எனச் சின்னங்கள் ஊதின. வலம்புரிச் சங்குகள் ஊர்ந்து செல்கின்றன. வெருகற்பதி சித்திர வேலாயுதப் பெருமான் வருகின்றான் வருகின்றான் எனப் பெருமைபடச் சின்னங்கள் ஊதின சிறப்புப் பொருந்திய கோணேஸ்வரத்தின் தென்திசையில் அமைந்த வெருகற்பதியில் கோயில் கொண்ட சித்திர வேலாயுத வேள் பூவுலகிலுள்ளவர்களும் காண உலா வருகின்றார். ஒப்பற்ற தென் வெருகற்பதி சண்முக வேலாயுதனார் அழகாகப் பவனி வரும் சிறப்பைக் காண்பதற்கு சிற்றிடை மாதர்கள் அன்னநடை பயின்று திரள் திரளாக வரும் தன்மையை இனிக் கூறலாம்.

## மயிலேறும் பெருமாள் மீது மாதர்கள் மயக்கம்

பெண்களில் சிலர் கையில் எடுத்த சேலையைக் கட்ட மறதியுற்று வெளியில் வந்தனர். வட்ட வடிவான தனத்தில் பால் அருந்தும் குழந்தைகளை மெல்லிடையில் வைத்து வேலவர் பவனி வருவதை விருப்புடன் பார்க்க வந்தனர். சில பெண்கள் வீதிக்கு வந்தால் மாமி தண்டனை தருவாள் என்ற பயத்தில் ஒழித்து வந்து வலிமை மிகுந்த வேலவரின் சிறப்பான பவனியைப் பார்ப்பார். வீதிக்கு வந்தவர்களில் சிலர் தன் நாயகன் கையென்று வேறு ஆடவனின் கையைப் பிடித்து வேடிக்கை பார்த்தனர். வாசனை கமழும் பூம் பஞ்சணையில் மன்மதன் விளையாட்டை ஆடி மகிழும் சதிபதியினர் அன்புப் பதியின் கரத்தை விலக்கி விட்டு விரைவாகத் தெருவுக்கு ஓடி வந்து மிகுந்த அழகான வேலவரின் உலாச் சிறப்பை பார்த்தனர். சிலர் நறுமணம் கமழும் சந்தணம், கஸ்தூரி இட்ட தங்கக் கிண்ணங்களை வரிசையாக நீட்டி வாழ்த்துக் கூறிநின்றனர். சிலர் மார்புக் கச்சை அவிழ்ததை வீசி விட்டு தம் மார்பகத்தைக் காட்டி நின்று பார்த்தனர்.சித்திர வேலாயுதரது சிங்கார யானையின் பக்கத்தில் நின்று மிக எதிர்ப்பது போல் கச்சிதமாய் தெரியும் தனங்களுடன் வரும் மங்கையர் அநேகம். அழகாக உலா வருதலைக் கண்ட பெண் ஒருத்தி வேலவரில் ஏற்பட்ட காதல் மயக்கத்தால் கட்டிலில் போய் படுத்தாள். இத்தன்மையைக் கண்ணுற்ற அவள் நாயகன் அழகிய மயிற் சாயலையுடையவளே உனக்கு ஏற்பட்ட வருத்தத்தை சொல் என்றான். தலை சுற்றுகிறது ஒன்றும் தெரியவில்லை என்றாள். விரைவாகச் சென்று நீரில்மூழ்கிவர இத்தீமை விலகும் என்று கூறினான். மின்னல் இடையுடைய நாயகியின் கையில் மணம் வீசும்

இஞ்சிச் சாற்றைக் கையில் இட்டு கன்னத்தில் பூசி விட்டான் மென்மையான இடையுடைய நாயகி குணம் காணாது வருத்தமுடன் மலர்ப்படுக்கையில் வந்து வீழ்ந்தாள். அழகு மிகுந்த பெண்கள் எல்லோரும் அச்சமயத்தில் சுயநினைவு இழந்து நின்றார்கள். வீதியிலுள்ள பெண்கள், அழகாக அலங்காரம் செய்த யானைமீது இருந்து வரும், கிரவுஞ்ச மலையை கூறாக எறிந்த குமரவேளைப் பார்த்தனர். பொன் உலகத்து இந்திரனோ அன்றிப் பூ மகளின் கணவனோ என ஐயமுற்றனர். விண்ணுலகு இந்திரனாயின் மேனியில் ஆயிரம் கண்கள் இல்லாததால் இந்திரனுமல்லன், மன்மதன் ஆயினும் பூக்கணையும் கரும்பும் வில்லும் இல்லை, எனவே மன்மதனும் அல்லன், செந்தாமரைப் பூவில் வதியும் ஸ்ரீ லட்சுமியின் கணவன் என்றால் சங்கு சக்கரம் கையில் இல்லை. எனவே அச்சுத வேளும் அல்லன், ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், அதோமுகம் என்று சொல்லும் ஆறு திருமுகங்களும் அருள் பொழியும் கண்களும் பெருமையான அழகிய பன்னிரு கைகளும், பகைவர்களைக் கணப்பொழுதில் கொன்று வரும் வேலும் இருப்பதால் மன இனிமை தரும் வெருகற்பதியுறை எம் குலதெய்வமாம். என அழகிய பெண்கள் எல்லோரும் சந்தேகம் தெளிந்தனர். வேலவனே வித்தகனே எனப் போற்றி நின்றனர். தமது சிவந்த கரங்களை உச்சி மீது கூப்பி வணங்கி இன்னருள் வேண்டுமெனப் பிரார்த்தித்தனர். எம் பெருமானும் துன்பமான வினைகளை நீக்கி அருள் சுரந்தார்.

## வால சித்திர மோகனப் பெண்ணின் காதல் மயக்கம்

வேலவரின் புகழைச் சொல்லித் துதித்த பெண்களுள் வாலசித்திர மோகனம் எனபவள் சொல்லரிய மோக மயக்கம் கொண்டாள். ஒளி பொருந்திய சித்திர வேலாயுதரில் ஏற்பட்ட காதல் மயக்கத்தால் வீடேகி கட்டிலில் விழுந்தாள். பல விகற்ப எண்ணத்தால் மனம் நைந்தாள் பூவுலகினரை காதல் இன்னலுக்குள்ளாக்கும் கருப்பு வில்லும் ஐம்பாணமுடைய மன்மதனையும் குளிர் நிலவையும் அழகிய குயில் இனத்தையும் சொல்லுதற்கரிய இதமான தென்றற் காற்றையும் ஏசலுற்றாள். ஏ! மாரனே உன் போல் ஆடவருடன் அமர் செய்யாது மங்கையருடன் ஏனோ அமர் செய்கின்றாய் தாமரைப் பூ அசோகம் பூ , மாம் பூ , முல்லைப் பூ , நீலோற் பலப் பூ ஆகிய ஐம் பாணங்களை விட மேலதிக பாணம் இருந்தால் எந்த உலகத்தவரையும் என்ன செய்வாயோ அறியேன். உன் கருப்பு வில் என் கையில் அகப்பட்டால்

அதைத் துண்டம் துண்டமாகக் கறித்து உண்டு உன் வலியைக் குறைத்து விடுவேன். உன் ஐந்து பூ அம்புகளும் என் பொற்கையில் அகப்பட்டால் ஐம் பாலில் (கூந்தல்) சூடிக் கவலையின்றி இருப்பேன். கண்ணால் காண முடியாத தன்மையினால் தான் நீ, மண்ணுலக மக்களுக்கு உன் வலிமையைக் காட்டுகின்றாயோ, கருப்பு வில் ஏந்திய மதனனே வீணே என்னுடன் போர்செய்யாது உன் துணைரதியுடன் சமர் செய்வாய். வானத்துச் சந்திரனே பூமியிலுள்ள மங்கையர்களுக்கு கண்முன்னால் தோன்றாது விலகிச்செல்ல கள்ளவழியில்லையோ? பதினாறு கலைகளோடு எந் நாளும் நீயிருந்தால் பூவுலக மங்கையர் படும் துயரத்தை எடுத்துச் சொல்வோமோ. ஈசன் ஜடா முடியை இருப்பிடமாக்கினாய். பின் ஏன் ஆகாயத்தில் ஒளியுடன் பிரகாசித்து உலாவுகின்றாய் விண்ணிலே குளிர் நிலாவைத் தருவதற்கு மாறாக கொடிய வெம்மையைத் தரும் உன்னை பூமியிலுள்ளவர்கள் தண்மதி என அறியாமையால் பெயர் தந்து விட்டார்களோ. தாங்க முடியாத காதல் மயக்கத்தால் வருந்தும் என் முன்னே மாமரத்துக் குயிலே நீ ஏன் வாய் திறந்து கூவுகின்றாய் உன்னைக் கையில் பிடித்தால் ஒரு பிடிக்குள் ஆவாய் அப்படியிருக்க ஒளி பொருந்திய பெண்கள் முன் மிகு சாமர்த்தியம் ஏன் காட்டுகின்றாய். காதல் மயக்க மங்கையருடன் மாரன் போர் செய்வதை அயலவருக்குச் செய்தி சொல்லவா கூவுகின்றாய். நீ கூவுவது மிகு நஞ்சாக ஒலிக்கின்றது உன் கூவும் ஒலி எந்தக் கணத்தில் அடங்குமோ யான் அறியேன். தெற்கில் நின்று தெற்றி வருதென்றாலே வடபால்வீசின் வாலையர்கள் சுகமாக இருப்பார்கள். மோக மயக்கத்தால் பலவாறு அரற்றிச் சொல்லிக் கொண்டே பஞ்சனைக் கட்டிலில் வருத்தமுடன் இருந்தாள்.

ஒளி பொருந்திய இடையுடைய மோகனப் பெண் கதையை நிறுத்தி மெற் கொண்டு அழகிய வேற் பெருமான் தெட்சன கயிலாயமாகிய திருக்கோணேஸ்வரத்திற்குச் சென்ற கதையை எடுத்துக் கூறுவோம்.

## ஈழம் உருவாகிய கதை

சத்வ குணமான வெள்ளி வெற்பின்துலக்கமான கொடு முடி ஒன்றை வாயு பகவான் அடித்துக் கொண்டு வந்து ஈழமாக உருவாக்கினான். இவ்வாறு ஏற்பட்டதே கோணேசர் பூமியும் மலையும், ஆகும். இது கோணேசப் பெருமான் எப்பொழுதும் உறைகின்ற மலை, தேவர்கள் நிதம் ஏத்தி வணங்கும் மலை, நிதம் வேதங்களும் போற்றித் துதிக்கும் மலை. அது தெட்சண கையிலாயம் என்ற பெயரைக் கொண்டது. அடியார்கள் நாளும் சூழ்ந்திருந்து பெரும் தவம் செய்யும் மலை.

## திருக்கோணேஸ்வரத்தில் சித்திர வேலாயுதர்

இவ்வித எழிலான மலையின் புறத்தில் வலிமை பொருந்திய வேற் பெருமான் யானையின் நின்றும் இறங்கினர். உலகின் அன்னையும் தந்தையுமான மாதுமை சமேத கோணேஸ்வரப் பெருமான் சன்னிதிக்கு ஒளி பொருந்திய வேற் பெருமான் வந்தார். அது போழ்து நந்தியந் தேவர் ஆறு முக நாயகனைக் கண்ணுற்றார் கொத்துக் கொத்தாகப் பூக்கும் கொன்றைப் பூவைச் சூடிய கோணேசப் பெருமானிடம் சென்று தென்வெருகற் பதி வாழ் சித்திர வேலாயுதப் பெருமான் இவ்விடம் வந்தாரென அன்புடனும் பயபக்தியுடனும் கூறினார். தேவர்கள் துயர் துடைத்த சித்திர வேலாயுதரை விருப்பமுடன் அழைத்து வரும்படி திருவாய் மலர்ந்தார்.

நந்தி தேவரும் அவ் வாசகத்தை சித்திர வேலாயுதரிடம் எடுத்து இயம்பினார். அவரும் மிகு மகிழ்ச்சியுடன் தாய் தந்தையர் இருக்கும் சன்னிதானத்திற்குச் சென்றார்.

## அம்மையப்பருடன் ஆறுமுகன்

ஐந்து திருமுகம் கொண்ட தந்தையின் பொன்மயமான திருவடிகளில் ஆறு திருமுடிகளையும் சாய்த்து அட்டாங்க நமஸ்காரம் செய்தார். தந்தை மகனை அன்புடன் அணைத்தார். அழகிய சிவந்த கரத்தைப் பற்றி வரமிகு பெருமை பெற்ற தாரகாசூரனையும் மாயமே நிறைந்த கிரவுஞ்ச கிரியையும் சிங்கமாமுகனையும், சூரபத்மனையும் அழித்த கையிதுவோ எனக் கைகளைப் பற்றினார், உந்திக் கமலத்தில் வீற்றிருக்கும் பிரமனைக் குட்டிய கையிதுவோ எனப் பற்றினார், ஆயிரம் கண்ணுடைய இந்திரனின் துன்பத்தைத் துடைத்துத் தேவ உலகை வாழவைத்த மென்மையான தாமரைப்பூப் போன்ற கையிதுவோ எனப் பற்றினார், இந்திரன் மகளாம் தேவகுஞ்சரிக்கு மாலையிட்ட தாமரை மலர் போன்ற மென்மையான கையிதுவோ எனப் பற்றினார். மாமேரு மலையின் செருக்க அடக்க செண்டால் அடித்தும், அப்புமயமாய் மாயம் செய் சூரனை சிறப்புடனே வேல் செலுத்தி அழித்த கை இதுவோ எனப் புகழ்ந்து கொண்றை மலர் மாலையணிந்த கோணேசர் மகிழ்ச்சியுடன் கையைப் பற்றி முத்தமிட்டார். அதன் பின்னர் அழகு வேலவர் அன்ன நடை மாதுமையம்மையின் பொன்போல் ஒளிரும் இருபாதத்தை வணங்கி

மகிழ்ந்தார். கன்னல் மொழி மாதுமையம்மை தன் செய்ய கரத்தால் பரிவுடன் தூக்கி தனது மடியிலிருத்தி வேலவரை உச்சி மோந்தாள் வேலவரின் மலர்ப்பாதத்தை தன் சிவந்த கையினால் தூக்கினார். தந்தையின் கையிலுள்ள மாங்கனியைப் பெறுவதற்கு தகுதியான மயில் மீதேறி அழகு நிறை பூவுலகை சுற்றி வந்த பாதம் இதுவோ எனப் புகழ்ந்தார். இலக்குமியாகிய மான் பயந்த வேடர் தலைவனாம் நம்பிராசனால் வளர்க்கப்பட்ட அமிர்த வல்லியாம் வள்ளி மேல் ஆசைப்பட்டு தினைக்காட்டிற்குச் சென்ற வாசனை மிகும் பாதம் இதுவோ எனப் புகழ்ந்தார். சூரசம்காரத்திற்காக வீரவாகுவுடனும் ஏனைய வீரர்களுடனும் சீரலைவாய் என்னும் திருச் செந்தூரில் சூழ்ந்திருந்த சிவந்த தாமரை மலர் போலும் பாதம் இதுவோ எனப் புகழ்ந்தார் அணிந்த பொன் ஆபரணங்கள் ஒளி கான்று ஒலிக்கவும் குன்றுகள் தோறும் திருவிளையாடல் புரியும் பாதம் இதுவோ எனப் புகழ்ந்தார். பெரிய பூமியிலும் தேவ உலகிலும் சரணம் என வணங்கும் அடியவர்களுக்கு நல்லருள் புரியும் அழகிய பொற்பாதம் இதுவோ எனப் புகழ்ந்தார். அதன் பின்னர் இனிய அமுதத்தை அன்பாக ஊட்டிய பின்னர் வெருகற் பதிக்குச் செல்ல விடை கொடுத்தார்.

## கந்த வெற்பில் கந்தவேள்

தந்தை தாயாரிடம் முறையாக விடை பெற்றுக் கொண்டு அழகிய பூம் பொழில் சூழ்ந்த கந்த வெற்பு என்னும் வளம் பல நிறைந்த வரைக்கு வந்து சேர்ந்தார். களிறுக் கூட்டங்கள் வானவில்லை ஒத்த செங்கரும்பை முறித்து தன் துணையாம் பிடிகளுக்கு கொடுக்கும். மகிழ்ச்சியாய் உலாவித்திரியும். கவிக் குலங்கள் மாங்கனியைப் பந்தடிக்கும் மந்தியினம் கொம்பரில் பாய்ந்து பாங்குடனே உலவித்திரியும் மதயானைகள் ஆகாய கங்கையைப் புழைக் கையால் வாகாக்க குடித்து நீர் விளையாடித்திரியும் புள்ளிமான் கூட்டங்களும் ஆ நிரைகளும் வருத்தம் இல்லாது கூடி விளையாடித்திரியும் மலைப் பெண்களின் கழுத்தைப் பார்க்க வேண்டுமெனப் பூஞ்சோலைக் கமுக மரங்கள் ஓங்கி வளர்ந்து நிற்கும். முக்கனி மரங்களின் பழச் சாறு ஆறாக ஓடும். மலர்ந்த மலரின் நின்று சொரியும் தேன் ஆறாக ஓடும். இத் தன்மைகளமைந்த அழகிய சோலையிலே சித்திர வேலாயுத வேள் வீற்றிருந்தார்.

# மோகனப்பெண்ணுக்கு தாயின் அறிவுரை

இந்த வேளையில் மகிமை நிறைந்த சித்திர வேலாயுத வேளின் மேல் மன நாட்டம் வைத்த மோகப் பெண் அவர் பூஞ்சோலையிலிருக்கும் சங்கதியைத் தெரிந்தாள். தன் தாயிடம் தேன் பிலிற்றும் சோலைக்குப் பாங்கியருடன் சென்று புதிய பூக்களைக் கொய்து வர விடை கேட்டு நின்றாள். இவ்விடம் திரும்பி வருவேன் சந்தேகம் கொள்ள வேண்டாம் என்றாள். நான் பெற்ற புதல்வியே பூங்குயிலே தித்திக்கும் கனி போன்றவளே அழகிய சித்திரப் பாவையே நான் கூறுவதை செவ்வையாகக் கேட்பாய் கனிரசங்கள் ஆறாகப் பாய்ந்தோடும் செஞ்சோலையிலே கருங்கேச அழகன் குமரவேள் மங்கையரை மாயப் பொடியினாலும் இடு மருந்தாலும் கண்சாடை காட்டும் சாமத்தியத்தாலும், தன்பக்கம் இழுத்திடுவார். அன்பு மிக்க வேலாயுத வேள் சோலையில் அமர்ந்திருப்பார் இத் தருணத்தில் உன்னைத் தன்வசமாக்கி மயக்கிடுவார். எனவே நீ போய் அவத்தைப்படாதே என்றாள். மென்மைத்தன்மையுடைய என் தாயே குமரவேள் இருக்கும் பூங்காவிற்குச் செல்லாது வேறு பூம் பொழிலிற்குச் செல்வதாகக் கூறி தெண்டனிட்டு வணங்கி தாயிடம் விடைபெற்றாள்.

# மோகனப் பெண்ணின் காதற் கோலங்கள்

அதன் பின்னர் வாச நீரில் ஆடி கூந்தலை அகிற் புகையூட்டி கூந்தலை அலங்கரித்தாள். கோங்கமலரின் அரும்பு போன்றும் தென்னை இளம் குரும்பையை ஒத்த தங்கக் குடம் போல் பிரகாசிக்கும் பொற்கிண்ணம் போல் வட்டமான திரட்சியுடைய தனங்களைக் கொண்டவள் மேல்முகமாக நிமிர்ந்த தனங்களுக்கு குளர் பன்னீர் புனுகு சவ்வாது சந்தணம் முதலான நறுமணப் பொருள்பூசினாள். யானையின் கொப்பு போல்வளைந்து நிமிர்ந்த தனங்களுக்கிடையே பசலை படர்ந்திருந்தது. அத்தனங்களுக்கு இந்திர நீலப் பட்டால் இழைத்த கச்சை அணிந்தாள். ஒடுங்கிய இடையில் எண்ணுக்கு அடங்காத நட்சத்திரம் ஆகாயத்தில் பூத்தது போல் பூ நிறைந்த பட்டாடையை அணிந்தாள். நெற்றியில் செந்தூரப் பொட்டு இட்டாள். மேனியில் களப கஸ்தூரி புனுகு சவ்வாது முதலான நறுமணத் திரவியங்களைப் பூசினாள். வாலை முத்து மோகனப்

பெண் தன்னைச் சிறப்பாக அலங்கரித்துக் கொண்டதும் பாங்கியரையும் அழைத்துக் கொண்டு சிறப்பான மலர் பறித்துவர சோலைக்குச் சென்றாள்.

## பாங்கியருடன் மோகனப் பெண்

தாமரை மொட்டு போன்ற மென்மையான பொன்மயத் தனங்களையுடையவள். அரம்பை, இங்கிதமாய் பேசும் மதுரமொழியாள், மோகினித் தோழி உடுக்குப்போல் இடையாள். மோகனம் என்பவள். நிறைந்த அழகி. வாலசௌந்தரம் நூல் இழை புக முடியாத நெருங்கிய திரட்சிகொண்ட தனங்களை உடையவள். கொவ்வையம் கனி அதரமுடைய சித்திரரத்தினம், சித்திரப் பாவை போன்றவள். இங்கிதம் எனபவள் மன்மதனும் ஆசைப்படும் அழகுடையவள். இவர்களுடன் மற்றும் தோழியரும் அலங்கரித்து தம் மதிப்புக்குரிய தலைவியின் முன் நின்றார்கள். வாலைமுத்து மோகனப் பெண் சேடியர் கூட்டத்துடன் சிறப்பான பூம் பொழிலை நோக்கி சென்றாள். இரு தனங்களும் ஆடவரை மன்மத மாளிகைக்கு அழைப்பது போல் குலுங்கியது. அன்னம் போல் நடந்து பூஞ்சோலையை அடைந்தாள்.

## பூஞ்சோலையில் மோகனப் பெண்

அங்கு வியப்புடன் நிறைந்த பூக்களைக் கொய்தாள். வண்டு உலவும் செண்பகமே, வாசமிகு கோங்கமே காண்போரை ஆச்சரியப்படுத்தும் அழகு மலர்களைத் தருவீர்களா என்று கேட்டு நின்றாள். குங்குமப் பூஞ் செடிகளே மென்தளிர் பாதிரி மரங்களே குளிர்ச்சியான மகிழ மரங்களே அழகிய தகுதியான மலர்களை தருவீர்களா என் கேட்டு நினறாள். தாழைகளே குருக்கத்திகளே, தாமரைக் கொடிகளே அடியாள் கூந்தலுக்குச் சூடப் பொருத்தமான மலர்களைத். தாருங்கள் எனக் கேட்டு நின்றாள். மல்லிகைச் செடிகளே சிறு செண்பகங்களே, சந்தணங்களே பஞ்சனை மீது பரப்ப மலர் தருமாறு கேட்டு நின்று மலர் பறித்திட்டு விளையாடும் நேரத்தில் தோழியர் இவளைத் தனியாக விட்டு அகன்று வாசமலர் பறிக்கச் சென்றனர்.

## சித்திர வேலாயுதர் சிந்தனை

கிளிப் பிள்ளை போல் இனிமையாகப் பேசும் சத்தம் சித்திர வேலாயுத வேளின் காதில் பட்டது. கரும்பு கற்கண்டு வாசனை வீசும் புதிய அமுதின் இன் சுவையை விஞ்சும் பேச்சொலி கேட்கின்றது பஞ்ச வண்ணக் கிளி பேசுவது போல் ஒலிக்கும் ஒலி எதுவாக இருக்குமென எண்ணுகையில் அழகான வாசனை மிகுந்த பூக்களைப் பறித்துக் கொண்டு வால முத்து மோகனப் பெண் எதிரே வந்தாள். இவள் மாங்குயிலின் இனிமையான குரலை ஒத்தவள். இளம் பிறை சூடிய பிஞ்ஞகனின் மகனாகிய குமரவேள் தன் உள்ளத்தில் சிந்தனை செய்தார். பூவுலகத்துப் பூவையோ அமரர் உலகத்து அரிவையோ என ஒன்றும் அறியாது குறிப்பாகப் பார்த்தார். தாமரை போல் சிவந்த பாதம் பூமியில் படிவதாலும் வண்டு மொய்க்கும் மாலை வாடுவதாலும் வேல் விழி வெட்டி இமைப்பதாலும் பூவுலகப் பூவையெனத் தெளிந்தார்.

மின்னல் இடையுடைய இப் பெண்ணுக்குப் பூவுலகப் பூவையர்களையோ இன்றி அமரர் உலகு அரிவையர்களையோ ஒப்பாகக் கூறமுடியாது. பதுமினி ஜாதியில் இவள் உத்தமி. பராயமோ பதினாறு காந்தருவக் கலையை உணர்ந்த சுபாவமாய் இருப்பதற்கு ஐயமில்லை. பூங்காவிற்கு வந்த மடக்குணப் பெண்ணை அழகு வேள் தன் வசப்படுத்த நினைந்தார்.

## வேலவரின் மன்மத சாகசம்

அவளுடன் மன்மத விளையாட்டு நடத்த நினைந்து நேராகப் பார்த்தார். அழகிய மார்பணிகளை அணிந்தவளே மயில் போலும் சாயலையுடையவளே உன் ஊரையும் பெயரையும் உரைப்பாயாக பஞ்ச வண்ணக் கிளிக்கு அன்பாய்ப் பேச்சுப் பழக்கவோ அன்னங்களுக்கு நடை பழக்கவோ இப்பொழிலுக்கு வந்தீர். கன்னிப் பெண்ணே அன்பாய் பேசலாகாதோ. மார்புக் கச்சு இறுக்குவதால் தனங்களின் வலிமையைக் கண்டோ மேருமலை ஈசன் கரத்தில் வில்லாக ஒரு சமயம் அமர்ந்ததுவோ. அடர்ந்த கூந்தலையுடைய பெண்ணே செம்பவள அதரத்திற்கும் முத்துப் போன்ற சிரிப்பிற்கும் அவை பயந்து வெண்திரைச் சமுத்திரத்தில் புகுந்து விட்டதோ. தாமரை மலர் போன்ற சிவந்த கண்ணும் சந்திரன் போல் முகமும் உடையவளே, உன்மதி முகத்துக்குப் பயப்பட்டா வெண்மதி வான்மதியாக அமர்ந்திருக்கின்றானா. மென் கூந்தல் அழகியே சிவந்த வாய்திறந்து பேசினால் முத்து உதிர்ந்து விடுமா? மண்ணுலகில் உன்னைப்

படைத்த பிரமன் வேறு பெண்களைப் பெருமைப்படுத்தாது இருக்க படைப்பதை விட்டு நீங்கினானோ? என்னை விரும்பி தனியே அதிக தூரம் நடந்தால் உன் தாமரை மலர் போன்ற பாதம் நோகாதோ? எனது தாகத்துக்கு இளநீரைத் தந்தால் அதை அமுதம் போல் பருகுவேன் பள்ள வெளி ஆலடியில் பண்படுத்தாத கீற்று நிலத்தை மகிழ்ச்சியாக ஒப்புவித்தால் முறையாகப் பண்படுத்தி மூன்று போகமும் விளைச்சலை பெருக்கி சிறப்பாகப் பிழைப்பேன். வாழையடியிலுள்ள தேன் கூட்டின் தேனை இனிதாகப் பருகிக் கொள்ள முடியும். இவ்வகையான வசனங்களைக் கேட்ட ஒளி பொருந்திய திரண்ட தனங்ளைளுயுடைய அப் பெண் புன்முறுவல் பூத்து நின்றாள். அவளது மெய்ப்பாட்டைக்கண்ணுற்ற ஒளி பொருந்திய வேலாயுத வேள் அவள் கையைப் பற்றி மல்லிகை, செவ்வந்தி பரப்பிய பாயில் இருத்தினார் இனிதாக மகிழ்ச்சியுடன் தாம்பூலத்தில் பாதியைக் கடித்துக் கொடுத்தார். பல வகையான முத்தத்தால் ஆலிங்கனம் செய்தார். அமுத நிலைகளில் உணர்வுகளை ஏற்படுத்தினார். மதன சாஸ்திரப்படி குறைவுறாது தையலுடன் இணை விழைச்சில் இணைந்தார். அவளைத் தன் தொடைமீது இருத்தி மகிழ்ச்சியாக வலக்கரத்தால் தடவினார். மென்மையான தாமரை மலர் போன்ற முகத்தினின்றும் வரும் வியர்வையைத் துடைத்தார். அன்பான மொழி பேசி அணிகலன்களை முன்போல் சீர் செய்தார். அவள் அழகிய முகத்தைப் பார்த்து மயில் போலும் சாயலையுடையவளே உன் பாங்கியருடன் அழகிய இல்லத்திற்கு மகிழ்ச்சியாக செல்லும் படி கூறினார். இவ் வாசகங்களைக் கேட்ட மோகனப் பெண் எக் காலத்தும் உம்மைப் பிரிந்திருக்க மாட்டேன் என்றாள். அதற்கு அவரும் கண்ணே என் கண்மணியே இப் பூமியில் உன்னை ஒரு பொழுதும் பிரிந்திருக்க மாட்டேன் என்றார். பூப்பறிக்கும் தோழியர் உன்னைக்காணாது பரபரப்படைவார்கள். இங்குற்றதை உன் மாதா அறிந்தால் விபரீதம் உண்டாகும். பூ மரத்துக் குயில் போன்றவளே உனது இல்லத்திற்கு போவாய் எனக் கூறினார். தென்னந் தருக்களும் புன்னைத்தருக்களும் சோலையாகச் சூழ்ந்த வெருகற் பதியில் எல்லோரும் போற்ற உன்னை வைத்திடுவேன். கச்சு இலங்கும் கும்பம் போன்ற தனங்களையுடையவளே நான் சிறப்பாக அணியும் கடப்ப மாலையை உன்னிடம் அனுப்புவேன். என இனிய வார்த்தைகளை அன்புடன் கூறி குமரவேளும் வெருகற் பதிக்குச் சென்று சேர்ந்தார்.

## மோகனப் பெண்ணின் பிரிவுத்துயரம்

பூங்காவில் மோகனப் பெண் பிரிவுத்துயரால் மயங்கி புலம்பலுற்றாள். மான் கூட்டங்களே, மயிற்கூட்டங்களே பசுங்கிளிகளே, தேன்சுவைக்கும் வண்டினமே, செங்கால் நாரைகளே பிரியேன் என என் தலையில் தொட்டு சத்தியம் செய்த பின்பு பிரிந்து சென்ற அழகனைக் கண்டீர்களா? அழகிய குயில்களே மாடப் புறாக்களே அழகிய ஒளிபொருந்திய வெருகற் பதிக்குப் போனால் பூஞ்சோலையிலிருக்கும் என்னிலையனைத்தையும் வேலவரிடம் எடுத்து இயம்புங்கள். அன்னப் பட்சிகளே அழகான பறவை இனங்களே வெருகற் பதியினின்றும் வருகின்றீர்களா? சொல்லுங்கள். தனியாக என்னைவிட்டு அகன்ற தலைவனின் தாமரை முகத்தைக் கண்டீர்களா? இங்கு கண்ணீர் விட்டு என் கதையைக் கூறினாலும் என்ன பயன். பெண்மையினால் அவர் பேச்சில் இளகி விட்டேன். நல்ல தெய்வப் பெண்ணே விட்டு பிரியேன் எனக் கூறி காம ஆசையை உடலில் ஏற்படுத்தி விட்டார். நல்ல பண்பாளன் போல் இருந்தார். அவர் இந்திர ஜாலம் போன்று செய்த செயலை சரியென நினைத்தேன். ஒளி பொருந்திய தனது வலது கையை என் தலைமேல் வைத்து செய்த உறுதி மொழியை நம்பி விட்டேன். அகம் புறம் தூய்மையரான வெருகற் பதி வேள் என் உடலை மன்மதனின் அம்புக் கூடாக்கி விட்டார். எனப் பலவாறு கூறி இரங்கினாள்.

## சேடியர் உபசாரம்

இவ்வேளையில் மலர் பறிக்கச் சென்ற சேடியர்கள் தேடி வந்தார்கள். மாங்குயில் போன்ற மோகனப் பெண் மன்மதன் தாக்கத்தால் சுய அறிவிழந்த நிலையைக் கண்டார்கள். நீலோற்பல விழிக்கன்னியைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றார்கள். கட்டிலில் வளர்த்தினார்கள். முத்துமாலையால் அலங்கரித்த மோகனப் பெண்ணின் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்தார்கள். எல்லாவித ஆசுவாசங்கள் செய்தும் மயக்கம் தெளியவில்லை. இத்தன்மையை கண்ட சேடியர்கள் அயர்ச்சியை நீக்க பலவாறு சிந்தித்தார்கள். இது வாய்விட்டு சொல்லக் கூடிய நோயாக இல்லை. எனினும் நல்ல மருத்துவரை விரைவாக அழைத்து வாருங்கள் என்றார்கள்.

வாசனை வீசும் மலர் பறிக்கத் தனியாகச் சென்றதினால் கெட்ட

பேய் பிடித்திருக்குமோ எனச் சிலர் கூறினார்கள். ஐந்து கரத்து ஆனை முகனுக்கு அறுநூறு தேங்காய் உடைத்துப் பாற் பொங்கல் இடுவோம். எனச் சிலர் நேர்ந்தனர். சிறப்புப் பொருந்திய கோணேஸ்வரத்தில் அமர்ந்த கோணேசநாதனுக்கும் அன்னம் போல் நடையுடைய மாதுமையம்மைக்கும் அபிடேகம் செய்வோம் என நேர்ந்தனர். நீர் நிறைந்த வாவிகள் சூழ்ந்த நீலாப்பளை உறையும் பத்தினியாளுக்கும் நேர்த்தி வைத்தனர். செம்மையும் பசுமையும் கலந்து பயிர்கள் செழிப்புற்று இருக்கும் சம்பூர் பதியிலுள்ள பத்திரகாளியின் காப்பு நூலை நம்பிக்கையுடன் தலைவியின் கையில் கட்டும்படி சிலர் கூறினர். தென் வெருகல் சித்திர வேலாயுத வேளின் படியில் ஐந்நூறு பொற்பணம் வைப்போம் என நேர்ந்தனர், விண், நில பாதாள உலகிலுள்ளவர்களாலும் செய்ய முடியாத அரியபூசை புணர்காரங்களை மூர்க்க மாதாவிற்கு செய்வோம் என்பர் சிலர் வனதேவதைகளான மாடன், காடன், கறுப்பன் முதலானவர்களுக்குக் காட்டுக் கடாக்களைப் பலியிடுவோம் எனச் சிலர் கூறினர். எவ்வித மருந்தூட்டியும் நேர்த்தி வைத்தும் கன்னியாகிய மோகனப் பெண் கண்விழிக்கவில்லை. இந்நிலை கண்ட தோழியர், ஒப்பாரும், மிக்காரும் இல்லாத அழகிய தலைவியின் நிலையைத் தாயிடம் கூறினார்கள்.

## தாய்கண்ட குறிகளும் ஏசலும்

தாயும் அவள் பக்கத்தில் வந்து பாதாதி கேசம் வரை நோக்கினாள். தனங்களில் நகக் குறி இருப்பதைக் கண்டு சந்தேகம் கொண்டாள். அதரங்கள் வெளுத்தும் மலர் விழிகள் சிவந்தும் வயிறு துடிப்பதுவும் அணிகள் கலைந்திருந்தும் கோதிய கேசம் குலைந்தும் உடலும் உள்ளமும் திரிவுற்றதால் கொட்டாவி விடுவதுவும் சேல் விழியில் தீட்டிய அஞ்சனமை கரைந்து கீழ்ப் போவதுவுங் கண்டாள். மார்பு அணி கசங்கி நைந்திருப்பதுவும் அழகிய வேலைப்பாட்டுடன் கூடிய கை வளையல்கள் பின்னப்பட்டிருப்பதுவுங் கண்டு மனம் பதைத்தாள். மகளிடம் கோபப்பட்டாள். நடந்த சங்கதியை செவ்வாய் திறந்து சொல் எனக் கேட்டழுதாள். பொன் போல் ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் பூக்களைப் பறிக்கப் பூஞ்சோலைக்குப் போகாதே எனத் தடுக்க என் சொல்லைத் தட்டி நடந்தாளே, மனத்தை மீறிய காம ஆசையுடைய கள்ளி நீ எனக்கு மகளாய்ப் பிறந்து எக்காலத்திலும் நீங்காத வசையை இவ்வுலகில் ஏற்படுத்தி விட்டாய். புதுமையான குணத்தன்மை கொண்டவளே. குலமதிப்பைக் கெடுத்து விட்டாய். ஏன் தான் என் வயிற்றில் பிறந்தாய். இப்புவியில் மதிப்பும் மானத்துடனும் வாழும் எமக்கு இழுக்கு வைக்கவோ

பிறந்தாய். பொன் மயப் பூக்களால் அலங்கரித்த மேடையில் முறைப்படி வதுவை செய்யாது வேடனுடன் காந்தருவ மணம் செய்து குற்றம் புரிந்தாய் நற்குலத்து ஆடவனுக்கு மாலையிடாது விற் பிடித்த வனசரனை மணக்க வீண் ஆசைப்பட்டாயோ? என வைதாள். அவனுடனே செல்லும்படி தள்ளி விட்டாள். தோழியரும் உடன் செல்லாதபடி வெளிக்கதவை பூட்டி விட்டாள்.

## தனிமைப்பட்டு இருந்த நங்கை.

தன் இனத்தைப் பிரிந்த தனி மான்போல் உளமும் உடலும் நடுங்க பூங்காவில் சந்தண மரத்தடியில் மனத்துயரத்துடன் வந்து இருந்தாள். யானை முகத்து ஐங்கரக் கடவுளே ஆறு முகவேலாயுதவேளே என வேண்டி தன் துயரைத் தீர்க்கும்படி அழுதாள்.

## மலைக்குற மங்கை வருகை

அந்த நேரத்தில் அழகுடைய குறமங்கை சித்திரப் பாவை போன்ற மோகனப் பெண் முன்வந்த கதையைக் கூறுவாம். சங்கு மணிகள் ஒளிர செங்கையில் வலைளயல்கள் ஒலிக்க சொல்லும் தரமற்ற கூடையுடன் வால்முத்து மோகனப்பெண் இருக்கும் இடத்திற்கு குறமங்கை வந்தாள். அவளது அழகான முகத்தை உற்றுப் பார்த்தாள் மன்மதனும் ஆசைப்படும் அழகுள்ள பெண்ணே மிக விரைவாக உனக்கு நன்மை வரப்போகின்றது. என்று கூறி நின்றாள். அதனை நீ நம்பு என்றாள். மோகனப் பெண் குறத்தியை இருக்கச் செய்து ஊர் பேர் முதலியவற்றைக் கேட்டாள். குறமாது தங்களது குலமரபும் மலைவளமும் பற்றிக் கூறினாள். மாட்சிமை பெற்ற பொதிகை மலை விளங்கும் கதிரைமலை, வானுலக வாசிகளும் போற்றித் துதிக்கும் திருக்கோணமலை, பொன் ஒளி பிரகாசிக்கும் உகந்தை மலை, எல்லோராலும் போற்றப்படும் இமயமலை, ஒளிகாலும் மேருமலை, வெள்ளி மலையாய கயிலாய மலை முதலாய கோடிக்கணக்கான மலைகளெல்லாம் எமது ஆதீனங்களாகும். (முது சொத்து) அத்தனைக்கும் பெயர் கூற முடியாது. சித்திர வேலாயுத வேளின் தேவி வள்ளிக்கு ஆதீனமான மலைகளெல்லாம் சீதனமாய்க் கொடுத்துள்ளோம். சொல்லுதற்கரிதான என் குலம். வெள்ளி மலைக்கு ஒருபால் வள்ளி நாயகியை வளர்த்த குறவர் குலம் ஒரு தலைவனுக்குக் கீழ் ஒன்பது கூட்டுக்குடும்பங்கள் சிறப்புடன் வாழும் குல ஆசாரங்களையும் பழக்க வழக்கங்களையும் எடுத்துக் கூற நேரம் போதாது, மங்கையே

என் குறவன் வரும் சமயமாகிறது. எனக் குறத்தி நவின்றாள். தனக்கும் நற்சகுணமாகக் குறி கூறும்படி முத்து மோகனப் பெண் கேட்டாள்.

## குறத்தி கடவுளரை வேண்டுதல்.

தன் தாமரை மலர் போன்ற செழுங்கையில் சிறு பிரம்பை தூக்கி ஐந்து கையானே, சகலருக்கும் சுகம் நல்கும் சங்கரனே, தாயவளே, உமையவளே, வேலவனே, பரிசுத்தரான வள்ளி நாயகியரே, வேல் விழியால் முத்து மோகன நங்கையின் எண்ணங்களை ஒன்றும்விடாது சொல்லி விடவும் என பிரார்த்தித்து வேண்டினாள். வாசனை நிறைந்த சாந்தைத் தனங்களுக்குப் பூசிய தையலே உன் காந்தள் மலர்க் கையை நீட்டு எனக் கூறினாள்.

## குறத்தி குறி கூறல்.

மனச் சிந்தையால் தலை நடுக்கம் கொள்கிறது. சரீரம் துடிக்கின்றது. காதல் காரணமா மனம் கடன் பட்டவர் போல் அலைக்கப்படுகின்றது. இவ்வுலகில் ஏங்கி வருந்துகின்றாய் இடப்பக்கலின் பல்லி மகிழ்ச்சியாகச் சொல்கிறது. பூ மாலை அணிந்த கூந்தலையுடையவளே கவலை வேண்டாம். தென் வெருகல் சித்திரவேலாயுத வேள் அன்புடன் காந்தருவ மணம் புரிந்துள்ளார். அன்று முதல் இன்று வரை மாற்ற முடியாத கவலைக்குள்ளானாய். இருப்பினும் இது நாள் வரையும் அன்பாய் வளர்த்த கிளியை தூதாய் அனுப்பினால் அது சென்று கடப்ப மலர் மாலையை வாங்கி வரும். எனக் கூறிச் செல்ல முற்படுக்கையில் பரிசாக முத்து மாலை ஒன்றை அவள் கழுத்தில் இட்டாள்.

## கிள்ளையைத் தூதுவிடல்.

கஜ முத்துக்களால் அலங்காரம் செய்த கூட்டில் வளர்த்த பஞ்ச வண்ணக் கிளியை அழைத்தாள். கிளியும் உடனே பசிய வளையல் அணிந்த கரத்தில் வந்தமர்ந்தது. அதைப் பார்த்துப் பின்வருமாறு கூறினாள். பச்சைக் கிளியே இது நாள் வரையும் ஒரு பொழுதும் மனதில் மறவாது பாலும் பழமும் ஊட்டி வளர்த்தேன். இப்போது நீ ஒரு உதவி செய்ய வேண்டும். அதைக்கேள் செம்மைசேர் வெருகற் செவ்வேள் பூஞ்சோலையில் ஆசைப்பட்டு பிரியேன் எனச் சத்தியம்

செய்து அணைந்து பிரிந்து சென்று விட்டார். அத்தன்மையால் ஏற்பட்ட நிலையைக் கேட்பாய் பெற்ற தாயும் பகையானாள். தோழியரையும் ஏசி விட்டாள். மனம் ஓயாது மன்மதனின் போராட்டத்திற்கு மிக இடமாகி விட்டது. அயலவரும் பகையானார்கள். குரல் இனிமையான குயிலும் ஏசி நிற்கிறது. குளிர்மையான சந்திரனும் வெப்பமாக் காய்கிறான்.. மென்கிளியே உடலும் சுடு மணல் போல் வேக்காடு கொள்கிறது. உறவினர்களும் பகையானார்கள். கடலும் பகையாகி விட்டது. எனவே நீ அவரிடம் சென்று கடப்ப மாலையை வாங்கி வர வேண்டும். வேலாயுத வேளிடம் விரைவாகப் பறந்து சென்று எனது துயரையும் அயர்ச்சியையும் வினையமாகச் சொல்லு.

## தூது செல்லும் சந்தர்ப்பம்.

என் போலும் பெண்கள் அன்புடன் அனுப்பும் தூதுவர்கள் பேசும் சமயத்தில் சொல்லாதே. இந்திராதி தேவர்கள் சந்திரன் ஆகாசவாசிகள் வணங்கி நிற்கும் நேரத்தில் எனது காதல் மயக்கம் பற்றிச் சொல்லாதே. பெரும் புகழ் பூத்த வெருகற் பதியில் கோயில் கொண்ட சித்திர வேலாயுத வேளின் மீது அன்பும் அபிமானமும் கொண்டு நெல் வயல்-நிலம், சோலை முதலானவற்றை நன்கொடையாகக் கொடுத்துப் புகழ் படைத்த இராசேந்திர சோழனும் அவன் பரிவாரங்களும் தொழும் வேளையிலும் இவ் விடயத்தைச் சொல்லாதே. மாணிக்கக் கற்கள் வைத்து அழகாகச் செய்த தங்கப் பதக்கமும் ஏனைய தங்க ஆபரணங்களையும் கொடுத்த பூபால வன்னிமையும் அவன் பரிசனர்களும் ஏத்தித் தொழும் வேளையிலும் சொல்லாதே. கண்டி நகரை ஆட்சி செய்த தங்கக் கிரீடம் தரித்த இராசசிங்க மன்னன் தெண்டனிட்டு வணங்கும் போதும் எனது சங்கதியைச் சொல்லாதே. சித்திர வேலாயுத வேள் உறையும் சித்திரவேலைப்பாடுடைய செம்மஞ்சல் கோபுரமும் கோயிலையும் கட்டுவித்த நல்லை நாதன் என்ற செட்டி வம்சத்தினர்கள் வந்து வணங்கும் வேளையிலும் இவ்விடயங்களைச் சிறிதேனும் கூறாதே ஆலயத் தொண்டுக்குரிய மரபு வழி அடப்பனர்களும் கங்காணம் முதலானவர்களும் இரு மரபும் தூய்மையான இளம் சிங்கன் என்ற வன்னிபமும் அவரது பொற் பாதத்தை வணங்கும் வேளையிலும் இவ்விடயத்தைச் சொல்லாதே. பூப்போன்ற மென்மையான கிளியே அடியார்கள் குறை வேண்டியும் நிறைவு பெறவும் அவர் ஆலோலக்கம் செய்யும் வேளையிலும் இவ்விடயத்தைச் சொல்லாதே. அட்டதிக்குப்

பாலகரும் இவ் வெருகற் பதியின் கண் உள்ளவர்களும். தெண்டனிட்டுத் தொழும் சமயத்திலும் எனது செய்தியைச் சொல்லாதே. வன்னிபங்களும் தேசத்தவர்களும் கோவிற் தலைமைக்காரர்களும் ஆயத்தார்களும் அழகிய மண்டபத்தில் கூடியிருந்து பழுதில்லாப் புகழ் படைத்த வீரக்கோண் முதலி இயற்றிய காதற் கதையை அரங்கேற்றும் போதும் எனது விடயத்தைச் சொல்லாதே. அன்ன சத்திரங்களும் முக்கனி தரும் தோப்புக்களும் சொல்லரிய தாமரைத்தடாகங்களும் அதிகம் காணப்படும் வெருகற்பதியில் உறை சித்திர வேலாயுதவேள் வெருகற்கங்கையில் நீராடி மேலான பூதியை அணிந்து கோணேசரின் தூய பாதங்களைப் பூசை செய்து இந்திராதி தேவர்களுக்கும் கிடைக்காத இனிய அமுதை அருந்திய பின்னர் சந்தனம் சவ்வாது கஸ்தூரி முதலான நறுமணத் திரவியங்களைப் பூசி குளிர்மையான பன்னீரையும் பூசி மாணிக்கப் பீடத்தில் வாகாகத் தனியாக இருக்கும் போது வாலமுத்து மோகனப் பெண் என்பவள் அனுப்பிய தூது எனக் கூறி அவர் அடி பணிந்து பக்குவமாய் எனது விருந்தாந்தங்களை இங்கிதமாய் கூறிக் கடப்ப மாலையை வாங்கி விரைவாக வரவேண்டும். எனக்கூறி கிளிப் பிள்ளையை அன்பாக முத்தமிட்டு வெருகற் பதிக்கு அனுப்பினாள். கிளியும் குன்று போன்ற இளம் தனங்களையுடைய மாதரசே வருத்தம் ஒழிக எனக் கூறியது. இத்தினத்தில் அந்தி நேரத்திற்கு முன் கடப்ப மாலையுடன் வருவேன் என அன்பான வாசகத்தை கூறி அழகாக சிறகடித்துப் பறந்தது.

## வெருகற் பதியில் தூதுக்கிளி.

வெருகற் பதி சேர்ந்த கிளி வெள்ளரசங் கிளையில் இருந்தது. அது சமயம் இந்திரனும் அச்சுதவேளும் பிரமதேவனும் எப்போதும் போல் பூசைகள் முடித்து தமது இருப்பிடம் நாடிச் சென்றனர். வேதம் ஓதும் வேதியரும் மனம் மகிழ்ந்து பூசை முடித்து போன பின்பு வேலாயுத வேள் அழகு விளங்கும் இரத்தின பீடத்தில் மனமகிழ்வாக இருந்தார். அப்போது கிளியானது இஃது நல்லவேளை எனப் பறந்து வந்து சித்திர வேலாயுத வேளின் பாதங்களை வணங்கி வாலைமுத்து மோகனப் பெண் மகிழ்ச்சியுடன் அனுப்பிய தூதன், தேவரீர் பூஞ்சோலையில் மங்கை நல்லாளை மருவி காந்தருவ மணம் பூண்ட பின்னர் அவளது செயல்களைக் கூறுவது கடினம். பிரிவுத்துயரால்

கூந்தல் முடியாள் குளிர்பூக்களைச் சூடாள். நறுமணக் கலவைகளைக் கண் கொண்டும் பாராள். அன்னம் அருந்தாள் பக்கலின் தோழியர் சென்றால் கோபம் கொள்வாள் கடுகடுப்பான வசனங்களைக் கூறுவாள். தேவரீருடைய நாமஸ்மரணம் அன்றி எவரோடும் கதையாள் எனக் கூறியது ஒளி காலும் வேலாயுத வேள் மிக நல்லதெனக் கூறிக் கிள்ளையைக் கையில் எடுத்தார்.

## சித்திரவேலாயுதர் கடப்பமாலை அளித்தல்.

மங்கை அனங்கனின் நோய்தீர, மாலைவாங்கி வரும்படி உன்னை கொஞ்சி அனுப்பினாளோ? கன்னியாகிய மோகனப் பெண்ணை வாட்டும் உபாதை தீர வடிவான கடப்ப மாலை தருகின்றேன். அதனைக் கொண்டு சென்று வேல் விழி மாதின் கையில் கொடுத்து காதற்பிரிவுத் துயரைத் துடைத்து வைப்பாய், எனக் கூறினார். தன்மார்பிலே இலங்கிக் கொண்டிருக்கும் கடப்பமாலையை எடுத்துக்கொடுத்தார். கிளிப் பிள்ளை அதிவேகமாகப் பறந்து செப்புப் போன்ற தனங்களையுடைய மோகனப் பெண்ணிடம் வந்தது. கிளிப்பிள்ளை மாலையைக் கொண்டு வந்தவுடன் அவள் முகம் கடல் மீது எழும் மதிபோல் தோண்றியது. தூய்மையான சித்திர வேலாயத வேள் கூறியவற்றையும் கூறி செங்கடப்ப மாலையையும் அவள் கையில் ஈந்தது. வட்டவடிவான தனங்களில் மாலையை அணைத்து மிகுந்த சந்தோஷம் அடைந்தாள். செங்கடப்ப மாலையைக் கயற் கண்ணால் பார்ப்பாள். பயோதரங்களில் அணைத்திடுவாள். முத்தமிடுவாள். கட்டுக்கடங்காத மையலைக் கட்டுப்படுத்த மாலையை விரைவாக அணிந்தாள். மனச் சந்தோஷத்துடன் தன் இல்லத்திற்குச் சென்று சிறப்பாக வாழ்ந்தாள்.

## வாழ்த்து

ஆகாயவாசிகளாலும் பூசிக்கப்படும் திருக்கோணேசரின் சிவந்த பாதம் எக் காலமும் வாழ்வதாக!

பெண் யானையின் நடையை ஒத்த அன்னை மாதுமையின் பொற்பாதம் வாழ்வதாக!

சமஷ்டி பிரணவ வியட்டிப் பிரணவமான ஓங்கார ரூபன் விநா
சிவசக்தி மைந்தன் அவ் விநாயகன் பாதம் வாழ்வதாக!

இந்தத் தென் கையிலாய பூமியில் தொண்டு செய்யும் தொண்டர்களது இடர்களை நீக்கி வைக்கும் சித்திர வேலாயுத வேளின் செம் பொற்பாதம் வாழ்வதாக!

திருவைந்தெழுத்தும் விபூதியும் உருத்திராக்கமும் வாழ்வதாக!
ஜடாபாரத்தில் சந்திரனை அணிந்த ஈசனது அடியார்கள் வாழ்வதாக!
கல்வி கேள்வியில் சிறந்த சான்றோர்களது பாதம் வாழ்வதாக!
எக் காலமும் புகழ் பெற்று விளங்கும் தம்பலகாமப் பதியும் வாழ்வதாக!

வெருகல் ஸ்ரீ சித்திரவேலாயுதர் காதல்வசனம் முற்றுப்பெற்றது.

சுபம்

சிவமயம்

## திருவாரூர் ஞானப்பிரகாச பட்டாரகர் அருளிச் செய்த

# புட்ப விதி

### விநாயகர் காப்பு

பாமாலை சூடும் பரமற்கு நாயடியேன்
பூமாலை பாடிப் புனைகிறேன் - மாமாது
லேவத் தலைவரருள வேழத்தின் பாதமலர்
போதத் தலைமேற் புனைந்து.

உமையம்மைக்கு நாயகரும் வேத முதல்வருமாகிய சிவபெருமான் அருளிய யானைமுகப்பெருமானின் திருவடித் தாமரைகளைப் போற்றி, அன்பர்களின் தோத்திரப் பாக்களை மலர் மாலைபோல ஏற்று அணிகின்ற பரமசிவனுக்கு (பூமாலை புட்பவிதி) ப் பூக்களைப் பற்றிய விதிமுறைகளைக் கூறும் நூலை அணிகின்றேன்.

விநாயகப் பெருமானை வணங்கிச் சிவபெருமானது அருளை விரும்பிப் புட்பவிதி என்னும் நூலை இயற்றுகின்றேன் என்ற படி.

### சிவபெருமான் துதி

பொன்பூத்த நறவிதழி புரிசடைமேற் புனைந்து
புனல் அறுகு வெள்ளெருக்கம் பூச்சூடி நளின
மின்பூத்த கருங்குவளை பசுங்குமிழ்செங் காந்தள்
வெண்முல்லை அரக்காம்பல் இடப்பாகம் பூத்து
முன்பூத்த புண்டரிகம், வெண்தளவம் இரண்டு
முகமலர இமையவர்கள் அகமலர முகுந்தன்
தன்பூத்த திருவுந்தி அயன்பரவக் கனக
சபையில்நட மிடுகடவுள் சரணமலர் சரணம். 1

மஞ்சள் நிறமும் தேனும் பொருந்திய கொன்றை மலரைச் சடாமுடியில் அணிந்தவரும் கங்காநதியையும் அறுகையும் வெள்ளெருக்க மலரையும் அணிந்திருப்பவரும் ஒளி பொருந்திய நீலோற்பவ மலர் போன்ற திருக்கண்களையும் குமிழமலர் போன்ற திருச்செவிகளையும், செங்காந்தள்மலர் போன்ற திருவிரல்களையும் முல்லையரும்பு போன்ற

திருப்பற்களையும் செவ்வாம்பல் மலர்போன்ற திரு அதரங்களையும் உடைய உமையம்மையை ஒரு பாகத்திலுடையவரும் செந்தாமரை, வெண்டாமரை என்னும் மலர்கள் மலர்வது போலத் தேவர்களது முகமும் அகமும் மலரவும் நாராயணமூர்த்தி அவரது உந்திக் கமலத்தில் தோன்றிய பிரமதேவரும் தோத்திரம் செய்யவும் பொன்னம் பலத்திலே ஆனந்தத் தாண்டவம் செய்தருளுகின்ற நடராசப் பெருமானுடைய திருவடிக் கமலங்கட்கு வணக்கம்.

## கோட்டுப்பூ வகை

வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, கோங்கு,
மந்தாரை, ஊமத்தை, மாவிலிங்கை, நொச்சி,
பன்னியகில், சந்து, மகிழ், மாதுளை, மா, அசோகு,
பாதிரி, வெள்ளெருக், கிலந்தை, பலாசு, நுணா, நறவம்
புன்னை, விளா, மருது, கொன்றை, நெல்லி, குராச், செருந்தி
பொன்னின் ஆவிரை, கிளுவை, குருந்து, வில்வம் நாவல்,
மன்னுதாதகி, குளஞ்சி, அலரி, வெட்சி, பவழ
மல்லிகை, சண்பகம், ஞாழல் கோட்டுப்பூ வகையே 2

வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, கோங்கு, மந்தாரை, ஊமத்தை, மாவிலங்கை, நொச்சி, பன்னி, அகில், சந்தனம், மகிழ், மாதுளை, மா, அசோகு, பாதிரி, வெள்ளெருக்கு, இலந்தை, முருக்கு, நுணா, அனிச்சம், புன்னை, விளாத்தி, மருது, கொன்றை, நெல்லி, குரா, செருத்தி, பொன்னாவரை, கிளுவை, குருந்து, வில்வம், நாவல், ஆத்தி, குளஞ்சி (கிச்சிலி), அலரி, வெட்சி, பவளமல்லிகை, சண்பகம், புலிநகக்கொன்றை என்பன கோட்டுப்பூவகையின. வன்னி, பலா, எலுமிச்சை, நாரத்தை, நொச்சி, அகில், சந்தனம், மா, இலந்தை, நுணா, விளாத்தி, கிளுவை, வில்வம், நாவல் என்பன பத்திரங்களே, பத்திரங்களும் பூவுக்குச் சமம் என்பது கருதி இவற்றையும் பூவகையிற் கூறினார். மாவிலிங்கையை நாகலிங்கம் என்பாரும் உளர்.

## கொடிப்பூ வகை

மருவாருங் காந்தள், காட்டுமல்லிகை, முல்லை, மௌவல்
கருவார்வெற் றிலையே, தாளி, கருமுகை கருங்காக்கொன்றை
முருகாரும் வெண்காக்கொன்றை, குருக்கத்தி, முதலா வுள்ள
இருவாட்சி, கொகுடி, பிச்சி இவையெலாங் கொடிப் பூவாமே. 3

கார்த்திகைப்பூ, காட்டுமல்லிகைப்பூ, முல்லைப்பூ, மல்லிகைப்பூ, வெற்றிலை, தாளிப்பூ, சிறுசெண்பகப்பூ, கருங்காக்கணம்பூ, மாதவிப்பூ, இருவாட்சிப்பூ, பிச்சிப்பூ என்பனவெல்லாம் கொடிகளிற் கிடைக்கும் பூக்களாம். வெற்றிலை பத்திரம். பத்திரம் என்றால் இலை.

## நீர்ப்பூ வகை

செய்ய தாமரை சேர்ந்த பொற் றாமரை
துய்ய தாமரை சொல்லிரண் டுற்பலம்
ஐய செம்மைய வெண்மையவாகிய
நெய்தல் மற்றிவை நீரின் மலர்களே. 4

செந்தாமரை, பொற்றாமரை எனப்படும் மஞ்சள் நிறத்தாமரை, வெண்தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், வெள்ளாம்பல், செவ்வாம்பல் என்னும் ஏழு பூக்களும் நீர்ப்பூ வகையின.

## நிலப்பூ வகை

பட்டி நா யுருவி, பூளை, பச்சை, செவ்வந்தி, தும்பை
வெட்டிவேர், மருக்கொழுந்து, கரந்தையே, விண்டுகாந்தி
மட்டவிழ் துழாய், செங்கீரை, மத்தை, செம்பரத்தை
இட்டகொககிற, கணிச்சம், வலம்புரி இவைநி லப்பூ. 5

பட்டி, நாயுருவி, பூளை, மாசிப்பச்சை, செவ்வந்தி, தும்பை, வெட்டிவேர், மருக்கொழுந்து, திருநீற்றுப்பச்சை, விஷ்ணு காந்தி, துளசி, செங்கீரை, ஊமத்தை, செம்பரத்தை, கத்தரி, கொக்கிறகு மந்தாரை, அனிச்சம், நந்தியாவர்த்தம் என்னும் செடிகளில் கிடைக்கும் பூக்கள் செடிப்பூவகையின. கரந்தை என்பது சிவகரந்தை என்றும் செங்கீரை என்பது திருநீற்றுப்பச்சை என்றும் கூறுவார் உளர். திருநீற்றுப்பச்சையும் சிவகரந்தையும் ஒன்றே என்பதும் ஒரு கருத்து.

நிலப்பூவகை என்று சொல்லப்பட்டவற்றுள் பூக்கிடையாதனவற்றின் துளிர், கதிர் என்பன உபயோகிக்கப்படும்.

## துளபம் எடுக்கலாகாத நாள்

இரவொடு காலை மாலை இரவியே, வெள்ளி, செவ்வாய்
பரவும்அட்டமி, ஈராறு பதினான்கு, பருவம், ஓணம்
விரவிய மாதத்தாதி, விதிபாதம், அபாரணத்தில்
மருவிய துளபங் கொய்யின் மால்சிரங் கொய்த லொக்கும். 6

இரவு, காலை, மாலை ஆகிய நேரங்களிலும், ஞாயிறு, வெள்ளி, செவ்வாய் ஆகிய கிழமைகளிலும், அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, பூரணை, அமாவாசை ஆகிய திகதிகளிலும், திருவோண நட்சத்திரத்திலும், மாதப்பிறப்பு விதிபாதயோகம், அபராணம் (பிற்பகல்) ஆகிய காலங்களிலும் துளசியை மரத்தினின்றும் கொய்தால் திருமாலின் சிரத்தை வெட்டுதலினால் உண்டாகும் பாவத்துக்குச் சமனான பாவம் ஏற்படும்.

சைவசமய நெறியுரையில் நாவலர் பெருமான் திங்கட்கிழமை ஸப்தமிதிதி என்பனவும் துளசி எடுக்கலாகாத நாள்கள் எனக்குறித்துள்ளார். இப்படி விலக்கப்படாத காலங்களில் துளசி எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

## வில்வம் எடுக்கலாகாத நாள்

தவமுறு மாதமுன், சதுர்த்தி, அட்டமி
நவமியே, சதுர்த்தசி, நவின்ற நல்லுவா,
அவமறு சோமவா ரத்தும் அன்பர்கள்
சிவனருச் சனைசெயும் வில்வந் தீண்டிடார். 7

மாதப்பிறப்பிலும், சதுர்த்தி, அட்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை, பூரணைத் திதிகளிலும் திங்கட்கிழமையிலும் அன்பர்கள் வில்வம் எடார். எடார் என்று சொல்லியிருந்தாலும் எடுக்கலாகாது என்பதே கருத்தாகும். சைவசமய நெறியுரையில் ஏகாதசி அன்று வில்வம் எடுக்கலாகாது என்று உள்ளது.

## துளபமும், வில்வமும் இத்தனை மாதத்துக்கு ஆகும் எனல்

கூறுநாளில் எடுத்திடு கூவிளம்
ஆறுமா தம்வைத் தர்ச்சனை செய்யலாம்;
நாறும் வெள்ளை நிறத்த நறுந்துழாய்
ஏறும் அர்ச்சனை ஈராறு திங்களே. 8

எடுக்கத்தக்க நாள்களில் எடுக்கும் வில்வத்தை ஆறு மாதமும் எடுக்கத்தக்க நாளில் எடுக்கும் வெண்துளசியினை ஒரு வருடமும் வைத்திருந்து உபயோகிக்கலாம்.

## துளபத்துக்கும் வில்வத்துக்கும் புறனடை

ஈரிலை கீழுற இருந்து பூத்திடுஞ்
சீரிய துழாமலர் தினமும் கொய்யலாம்
ஊரிடும் புழுக்கடி யொன்று மேயலாற்
பாரினில் லவையெல்லாம் பழுதில் வில்வமே. 9

கீழ் நோக்கியுள்ள இரண்டிலையோடுள்ள துளசிக்கதிரை விலக்கப்பட்ட நாள்களிலும் கொய்யலாம். (மூன்று இதழோடு உள்ள வில்வத்துக்கே எங்கும் பெருமை சொல்லப்பட்டதாயினும்) புழுக்கடித்தல் என்னும் குற்றம் இல்லாத வில்வம் எல்லாம் பூசைக்கு அருகதையுள்ள வில்வங்களேயாம்.

## இன்ன இன்ன பத்திர புட்பங்களிலே நிர்மலியமும் ஆகும் எனல்

செழித்திடுந் துளபமும், சிறந்த வில்வமும்
வழுத்துபொன் மந்தமும், மலரும் நீலமும்,
அழுத்துசெம் பொன்மல ரதனைப் போலவே
கழித்தநிர் மாலியங் கழுவிச் சாத்தலாம். 10

துளசியும் வில்வமும் பொன்னூமத்தை மலரும் நீலோற்பவமலரும், பொன்னாற் செய்யப்பட்ட மலர்களைப் போலப் பூசித்து நிர்மாலியமானாலும் பின்னர் கழுவிப் பூசைக்கு உபயோகிக்கலாம்.

பொன்னாற் செய்யப்பட்ட பொன்மலர்களும் இங்கு சொல்லப்பட்ட இயற்கையில் உண்டாகும் மலர்களும் ஒருமுறை பூசிக்கப்பட்டால் நில்மாலியம் ஆகும் என்பதும் அவை தூய நீரால் கழுவப்பட்டுவிடின் நிர்மாலியத் தன்மைபோய் பின்னரும் முன்போல் பூசைக்கு உபயோகமாகும் தகுதியைப்பெறும் என்பதும் பிறமலர்கள் ஒருமுறை மட்டுமே உபயோகிக்கலாம் என்பதும் இச்செய்யுளால் கொள்ளத்தக்க கருத்துக்களாகும்.

## இம்மலர் இத்தனை நாளுக்கு ஆகும் எனல்

அம்புயம் ஏழுநாள், அலரி மூன்றுநாள்,
வம்பவிழ் குடலையில் வைத்துச் சாத்தலாம்;
நம்பிடு நறுமலர் நண்ணி டாவிடில்
தம்பழுப் பரும்பிலை தளிரும் சாத்தலாம். 11

தாமரைப்பூ ஏழு நாள்களுக்கும், அலரி மூன்று நாள்களுக்கும் எடுத்தபின் பூக்கூடையில் வைத்திருந்து பூசிக்கலாம். மலர்கள் கிடைக்காவிடில் அவற்றுக்குப் பதிலாக அந்த அந்தத் துளிர், இலை, அரும்பு, என்பனவற்றை உபயோகிக்கலாம்.
அரும்பு - மொட்டு.

## உத்தம் மத்திம அதம மலர்கள்

உத்தமம் தனக்கென வுற்ற நந்தனம்;
மத்திமம் காட்டினில் மலர்ந்த பூவெலாம்;
இத்தலத் தொருவன்வைத் திட்ட சூழலில்
அத்தனை மலர்களும் அதம மாகுமே. 12

ஒருவன் தான் சொந்தமாக உண்டாக்கிய நந்தவனத்திலிருந்து பெறும் மலர்கள் பூசைக்கு உத்தமமானவையாகும். காடு முதலிய பொது இடங்களிலிருந்து கிடைக்கும் மலர்கள் மத்திமமானவையாகும். பிறர் தம் தேவைக்கு என உண்டாக்கிய நந்தவனத்தில் பெறும் மலர்கள் அதமமாம்.

சுடுகாட்டின் சமீபம், சண்டாளபூமி, அதன் சமீபம் என்னுமிடங்களில் உண்டாக்கிய பூவும் பூசைக்கு ஆகாது என்றும், திருக்கோயிலுள்ளும் அதன் சமீபத்தும் உண்டாகிய பூ ஆன்மார்த்த பூசைக்கு ஆகாது என்றும் சைவ சமய நெறியுரை கூறுகின்றது.

## இம்மலர்கள் இழிபெனல்

எடுத்துவைத்தே அலர்ந்தமலர், பழம்பூக்கள், மற்ற
எருக்கிலைஆ மணக்கிலையி னிற்பொதிந்த பூக்கள்,
உடுத்தபுடை வையிற்கரத்தின் அமைத்தநறும் பூக்கள்,

உதிர்ந்திடுபூ அரையின்கீழ் உற்றவிரைப் பூக்கள்
அடுத்தபுழுக் கடிஎச்சம் சிலந்திமயி ருறுதல்,
அங்கையில்வைத் தங்கைகுவித் திடுதல் கங்குல்தனிலே
எடுத்தமலர், நீரமிழ்த்தல், புறங்காட்டி லெய்தல்,
எச்சில், குளி யா தெடுத்தல் இழிபெனும்ஆ கமமே. 13

எடுத்து வைத்த பின் மலர்ந்த மலர்களும், பழையவான மலர்களும், எருக்கிலை, ஆமணக்கிலை என்பனவற்றில் வைக்கப்பட்ட மலர்களும், உடுத்த புடவையிற் கொணரும் மலர்களும், கையிலே கொணரும் மலர்களும், மரத்திலிருந்து தாமே உதிர்ந்த மலர்களும், பூ எடுப்பவர் அரையின் கீழ்ப் பிடித்துக்கொண்டு வரப்பட்ட மலர்களும், புழுக்கடி, எச்சம், சிலந்திவலை, தலைமயிர் இவற்றோடு கூடிய மலர்களும், கையில் வைத்துக் கையால் மூடிக்கொணரும் மலர்களும், இரவில் எடுத்த மலர்களும் நீரோட்டத்தில் அகப்பட்டு அமிழ்ந்திய மலர்களும், சுடுகாட்டில் மலர்ந்த மலர்களும், எச்சில்பட்ட மலர்களும், குளியாதும் (அனுட்டானம் பண்ணாதும்) எடுத்த மலர்களும் பூசைக்கு உதவாதன ஆகமங்கள் கூறும்.

## வார புட்பம்

பங்கயம் மலர்ந்த வெள்ளாம்பல், பாசடைச்
செங்கழுநீர் மலர்தகரச் செம்மலர்,
தங்கிய குவலயம் ததைவெண் டாமரை
மங்கைகேள் நீலம்ஏழ் வார புட்பமே. 14

தாமரை; வெள்ளாம்ல்; செங்கழுநீர்; தகரச்செம்மலர்; நெய்தல்; வெண்டாமரை; நீலோற்பலம் என்னும் ஏழு மலர்கள் முறைமே ஞாயிறு முதலிய ஏழு கிழமைகளில் இறைவனைப் பூசித்தற்குச் சிறப்புடையவனாம். தகரம் ஒருவகைச் செடி. இது கையாந்தகரை இனத்தைச் சேர்ந்தது என்பர்.

## வார பத்திரம்

சூரியன் வில்வமே; துளசி திங்களே;
ஆரலில் விலாஇலை; அறிவன் மாதுளை;
வேரிநா யுருவிபொன்; வெள்ளி நாவலே;
காரியாஞ் சனியினில் விண்டு காந்தியே. 15

வில்வம், துளசி, விளாத்தி, மாதுளை, நாயுருவி, நாவல், விஷ்ணுகாந்தி என்னும் ஏழு இலைகளும் முறையே ஞாயிறு முதலாய ஏழு கிழமைகளில் இறைவனைப் பூசித்தற்கு உரிய பத்திரங்களாம்.

## பஞ்ச வில்வம்

மெச்சியே அடியவர் வியந்து சாத்திடும்
நொச்சியே, நறுவிளா, நுவன்ற கூவிளம்
வைச்சிடுங் கிளுவையே, மாவிலங்கையின
பச்சிலையென்றிவை பஞ்ச வில்வமே. 16

அடியவர்கள் வில்வத்தோடொப்ப மதித்துச் சாத்தும் பஞ்ச வில்வங்களான : நொச்சி, விளாத்தி, வில்வம், கிளுவை, மாவிலங்கை என்பனவாம்.

## காலையிற் சாத்தும் அட்ட புட்பம்

வம்பவிழ் அலரி, நாயுருவி, மல்லிகை
வெம்பிய எருக்குடன், வில்வம், வெண்மலர்
நம்பிய வடுக்கலர், நந்திநாண்மலர்
அம்புயம் காலையில் அட்ட புட்பமே. 17

அலரி, நாயுருவி, மல்லிகை, வெள்ளெருக்கு, வில்வம் ஏதேனும் ஒரு வெள்ளைப்பூ, வெள்ளை அடுக்கலரிப்பூ, நந்தியா வர்த்தம் என்பன காலை வழிபாட்டுக்குரிய அட்ட புட்பங்களாம். (எட்டு மலர்களாம்)

## உச்சியிற் சாத்தும் அட்ட புட்பம்

போதவிழ்பொன்னூ மத்தை, புலிநகக் கொன்னை, வெள்ளைப்
பாதிரி, வன்னி, செய்ய வழுதுணை, படர்மந் தாரை,
பேதமாய் மலரும் வெள்ளைக் காக்கொன்றை, பெரிய தும்பை
ஓதியவிவைக ளெட்டும் உச்சியில் அட்டபுட்பம். 18

பொன்னூமத்தை (மஞ்சன் நிற ஊமத்தைப் பூ), புலி நகக்கொன்றை, வெண்பாதிரி, வன்னி செங்கத்தரி, மரமந்தாரை, வெண்காக்கணம், தும்பை என்பன உச்சிக் காலத்தில் அட்ட புட்பங்களாகச் சாத்தத்தக்கன.

## அந்தி அர்த்தயாமம் அபராணங்களிற் சாத்தும் அட்ட புட்பம்

வந்தமல் லிகையிரண்டு, மகிழ்தரு மல்லிகைப்பூக்
கொந்துவேர், சண்பகப்பூச் சிறிய சண்பகம் கொழுந்து
சிந்தைகூர் அட்ட புட்பம் சிவன்முடிக் கேறும் போழ்தில்
அந்தியோ டர்த்தயாமம் அபராணந் தனிலு மாமே 19

மல்லிகை, காட்டு மல்லிகை, மகிழ், பவள மல்லிகை, வெட்டிவேர், சண்பகம், சிறுசண்பகம், மருக்கொழுந்து என்பன அந்தி, அர்த்தயாமம், அபராணம் என்னுங் காலங்கட்குரிய அட்ட புட்பங்களாகும்.

## புலரி முதலிய காலம் எல்லாவற்றிற்கும் உரிய அட்ட புட்பம்

இலகிய புன்னைவெள் ளெருக்குச் சண்பகம்,
நிலவிய வலம்புரி, நீலம், பாதிரி
அலரிசெந் தாமரை, அட்ட புட்மாம்,
புலரியம் போதொடெப் பொழுதும் சாத்தலாம் 20

காலை முதலிய எல்லாக் காலங்கட்குமுரிய அட்டபுட்பங்கள் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம் பாதிரி, அலரி, செந்தாமரை என்பனவாம்.

## மாத புட்பம்

மெத்திய பலாசு புன்னை, வெள்ளெருக் கலரிப் போது,
கொத்தலர் சண்பகப்பூக் கொன்றையே தும்மை செய்ய
கத்தரி, பட்டி கஞ்சம் காவிமல்லிகை ஈராறும்
சித்திரை முதலாக் கொள்க சிறந்திடும் மாத புட்பம். 21

முருக்கு; புன்னை; வெள்ளெருக்கு; அலரி; சண்பகம்; கொன்றை; தும்பை; கத்தரி; பட்டி; தாமரை; செங்கழுநீர்; மல்லிகை என்னும் பன்னிரண்டு மலர்கள் முறையே சித்திரை முதலான பன்னிரண்டு மாதங்களில் பூசைக்கு விசேட உரிமை உடையன. மாதம் எனப் பொதுவாகக் கூறினாலுத் அது அந்த மாதப் பௌர்ணமியை விசேடமாகக் குறிக்கும் என்பர்.

## மாத அபிடேகம்

கொழுந்து, சந்தனம் கூறிய முப்பழம்
அழுந்து பால், சர்க்கரை, பணி யாரமே,
தழைந்த அன்னம், தழல், நெய் ஒழுகுதேன்,
விழைந்த நெய்பொதி கம்பளம், வெண்டயிர் 22

நன்கு அரைக்கப்பட்ட சந்தனம், மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், பால், சர்க்கரை, பணியாரம், அன்னம், நெய் தேன், நெய் பொதிக்கம்பளம், வெண்தயிர் என்னும் பன்னிரண்டும் முறையே சித்திரை முதலிய பன்னிரண்டு மாதங்களில் அபிடேகம் செய்தற்குரிய விசேட பொருள்களாம்.

சித்திரை மருக்கொழுந்து, வைகாசி சந்தனம், ஆனி முப்பழம், ஆடி பால், ஆவணி சர்க்கரை, புரட்டாதி பணியாரம் என்னும் அப்ப வகை, ஐப்பசி அன்னம், கார்த்திகை தழல் (விளக்கொளி) மார்கழி நெய், தை தேன் மாசி நெய்பொதிகம்பளம் (நெய்தோய்த்த கம்பளம்) பங்குனி தயிர் எனவும் ஆடி சர்க்கரை, ஆவணி அதிரசம் முதலிய அப்ப வகை, புரட்டாசி பால் எனவும் கொள்வாரும் உளர். (இச்செய்யுளின் பொருள் சகலாகம பண்டிதர்களாயுள்ளோர்க்கே சந்தேக விபரீதமற்ற தெளிவாகும்)

## கேதார நாதருக்குரிய பத்திர புட்பம்

வில்வம்மருச் சூதம்மத்தம் மாதுளையே, நொச்சி
மேவியமுள் ளிலந்தை, நறுங் கரந்தைசெழு வன்னி,
சொல்லியகத்தரி, நெல்லி, சண்பகபே, சாதி,
தும்பையொடு, மருது மாமந்தாரம் அலரி
எல்லவரும் புகழுமந்த விண்டு காந்தி
எழில்தே வதாருவுடன் எருக், கறுகென் றுரைக்கும்
நல்லவனாம் பத்திரங்கள் இருபத் தொன்றும்
நாடரிய கேதார நாதனுக்கர்ச் சனையே 23

கேதார நாதருக்குரிய பத்திர புட்பங்கள், வில்வம், மருக்கொழுந்து, மாவிலை, ஊமத்தை, மாதுளையிலை, நொச்சியிலை, இலந்தையிலை, திருநீற்றுப்பச்சை, வன்னியிலை, கத்தரிப்பூ, நெல்லிப்பூ, சண்பகப்பூ, மல்லிகைப்பூ, தும்பைப்பூ, மருதம்பூ, மந்தாரைப்பூ, அலரிப்பூ, விஷ்ணுகாந்திப்பூ, தேவதாருப்பூ, எருக்கம்பூ, அறுகம்புல் என்னும் 21

பத்திர புட்பங்களும் கேதாரநாதரைப் பூசிப்பதற்கு உரியனவாம்.

திருக்கேதாரம் என்னும் தலத்தில் எழுந்தருளியிருப்பவர் என்பது மமட்டுமன்றி கேதார விரத காலத்தில் பூசிக்கும் போதும் சிவபெருமானுக்குக் கேதாரநாதர் என்னும் பெயர் சிறப்பானதாகும்.

கேதார விரதமாவது புரட்டாதி மாதச் சுக்கில பட்ச அட்டமி முதல் 21 நாள்களுக்குச் சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும்.

## விநாயக சதுர்த்திக்குரிய பத்திர புட்பம்

மேதகுமா சிப்பச்சை, நறுங்கையாந் தகரை
வில்வமுடன் ஊமத்தை, நொச்சி, நாயுருவி
ஏதமில்கத்தரி, வன்னி, அலரி, காட் டாத்தி,
எருக்கு, மருதுடன், மால்பே ரியம்புகாந்தி,
மாதுளையே, உயர்தேவ தாரு, மரு நெல்லி,
மன்னுசிறு சண்பகமே, கெந்தளி, பாதிரியே
ஓதரிய அறுகிவைஒ ரிருபத் தொன்றும்
உயர்விநா யகசதுர்த்திக் குரைத்திடுபத் திரமே 24

விநாயக சதுர்த்திக்குரிய பத்திர புட்பங்களாவன மாசிப்பச்சை, கையாந்தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, வன்னி ஆகிய பத்திரங்களும் அலரி, கத்தரி, ஆத்தி, எருக்கு, மருது, விஷ்ணுகாந்தி, மாதுளை, தேவதாரு, மருக்கொழுந்து, நெல்லி, சிறுசண்பகம், கெந்தளி, பாதிரி ஆகிய மலர்களும் அறுகம்புல்லும் ஆகிய இருபத்தொன்றும் விநாயக சதுர்த்தி விரத காலத்தில் விசேடமாகச் சாத்திப் பூசித்தற்கு உரியனவாம்.

## புட்பம் சாத்தும் முறைமை

முறையுறும் அட்ட புட்ப முதலிய சாத்தும் போதில்
இறைவனுக் கொருபூவேனும் எண்ணினிற் குறைய லாகா,
நிறைவுறப் புனைதல் வேண்டும் நீள்மலர் கிடையா தாகில்
குறைவறச் சொன்ன புட்பம் கூட்டியும் கொள்ள லாமே. 25

அட்டபுட்பம், இருபத்தொரு பத்திர புட்பங்கள் என்று கணக்க

வைத்து மலர்களை இறைவனுக்குச் சாத்தும் போது, மலர்கள் குறிப்பிடப்பட்ட எண்ணில் ஒன்றேனும் குறையலாகாது. சொல்லப்பட்ட மலர்களுட் சில கிடைக்காவிடில் கிடைக்காத மலருக்குப் பதிலாக பொன்னாற் செய்யப்பட்ட மலரை வைத்துக் கொள்ளலாம்.

நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு என மந்திரங்களில் எண்ணிக்கை வைத்து அர்ச்சனை செய்யும் காலங்களில், மலர்களும் மந்திரங்களும் எண்ணிக்கை வரையறையில் வேறுபடாது ஒத்திருத்தல் வேண்டும் என்பது ஈண்டு கவனத்திற் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

சுவர்ண புஷ்பமாவது ஒரு கர்ஷமாகிலும் பதினொரு உளுந்தளவாகிலும் எடையுடைய சுவர்ணத்தால் செய்யப்படுவது. கர்ஷம் என்றால் எண்பது குன்றிமணி எடை. இவ்விதம் போதிய நிறையும் முறையும் கவனித்துச் செய்யப்படும் சுவர்ண புஷ்பம் சிவபெருமானுக்கு மிக மிகப் பிரீதியைக் கொடுக்கும். செவ்வரத்தை மலர் ஒன்றுக்கு இரண்டு சுவர்ண புஷ்பங்களும் சிறு சண்பகம், மல்லிகை ஐந்து சுவர்ண புஷ்பங்களுக்கும் ஜாதி மல்லிகை முல்லை மலர் ஒவ்வொன்று ஆறு சுவர்ண புஷ்பங்களுக்கும் செந்தாமரை மார் ஏழ சுவர்ண புஷ்பங்களுக்கும் அசோக மலர் பத்து சுவர்ண புஷ்பங்கட்கும் நூற்றிதழ்த் தாமரை எண்ணாயிரம் சுவர்ண புஷ்பங்களுக்கும், வெள்ளெருக்கு மூவாயிரம் சுவர்ண புஷ்பங்களுக்கும் ஊமத்தை ஐயாயிரம் சுவர்ண புஷ்பங்களுக்கும், வில்வத்தளம் இலட்சம் சுவர்ண புஷ்பங்களுக்கும் சமானம் (சிவாகம புராணம்) செவ்வரத்தை முதல் வில்வம் ஈறாகச் சொல்லப்பட்ட பத்திர புஷ்பங்களின் மகிமையை உணர்த்தற்குச் சிவமகா புராண வாக்கியம் பெரிதும் உதவுகின்றது. செவ்வரத்தை முதலிய பத்திரபுட்பங்கள் சிவ தீட்சை பெற்றிருத்தல் முதலிய பூ எடுக்கும் தகுதிகள் உள்ளோர் முறைப்படி தகுதியான இடங்களில் இருக்கும் மலர்களை எடுத்து இறைவனுக்குச் சாத்தினாற்றான் மலர் சர்தி வழிபடுதலால் கிடைக்கத்தக்க பயன்கள் கிடைக்கும். என்பதையும் சிவதீட்சை பெறாமலும், மது, மாமிசம் புசிப்பவர்களாக உள்ளவர்கள் ஆகமக் கருத்துக்கள் அறியாமலும் பக்தி சிரத்தை இல்லாமலும் கூலிப்பணத்தையே கருதியும் எடுத்துக் கொடுக்கும் மலர்கள் பூசை முதலிய தெய்வ காரியங்கள் யாவற்றுக்கும் அருகதை அற்றன. என்பதைப் பூசகர்களும் ஆலய நிர்வாகிகளும் ஆலயங்களில் திருவிழா முதலிய உபயங்கள் செய்வோரும் கருத்திற் கொள்ளல் அவசியம்.

## இதுவுமது

நறைமலர்ப் பொகுட்டுநன் னாளம் போக்கியே
குறையுறக குற்றமாம்; குறைப டாவகை
நிறைவுறச் சாத்துக; நீரின் போதெலாம்
புறஇதழ் போக்கினும் புனித மென்பவே. 26

மலர்களின் நடுவில் உள்ள "கேசரம்" "உளை" என்னும் (குஞ்சம் போன்ற) பகுதிகளைத் தவிர்த்துச் சாத்துதல் குற்றமாம். இக் குற்றம் ஏற்படாதபடி உறுப்புக்கள் குறையாத மலர்களையே இறைவனுக்குச் சாத்துக. நீர்ப்பூக்களுக்குக் கவசம்போல், மூடியுள்ள புற இதழ்களை நீக்கினாலும் அம்மலர்கள் குற்றமற்றன. பூசனைக்கு உரிமையுடையனவாயே இருக்கும்.

நீலநிறப் பூக்களின் புற இதழ்களை நீக்குதலும் குற்றமின்று என்றமையால் நீக்காமலும் பூசிக்கலாம் என்பதும் நீர்ப்பூ அல்லாதனவற்றுக்குப் புற இதழ் நீக்கல் குற்றமாம் என்பதும் பாடலின் குறிப்புப் பொருளாயுள்ளன.

## இன்ன மலர் இன்ன தேவர்காமெனல்

வில்வமுடன் கொன்றைமலர் சங்கரற்கு நேயம்;
வேழமுகற் கறுகு; வெட்சி, கடம்புவிசா கனுக்காம்;
குல்லைநெடு மாலவற்காம்; மலைமகட்கு நீலம்;
கோகனதம் சூரியற்குத்; திருமகட்கு நெய்தல்;
வல்லகலை மடந்தைக்கு வெண்கமலம் நேயம்;
வருங்கொடிய கடவுளார்க்குச் செம்மலர்கள் நேயம்;
அல்லிமலர் கருங்குவளை அணைவருக்கும் நேயம்
அம்மலரே எம்மலர்க்கும் அதிகம்என உரைப்பார் 27

வில்வமிலையும் கொன்றைப்பூவும் சிவபெருமானுக்கும், அறுகம்புல் விநாயகருக்கும், வெட்சிப்பூவும் கடப்பம் பூவும் முருகனுக்கும், துளசி திருமாலுக்கும், நீலோற்பலம் உமாதேவியாருக்கும், செந்தாமரைப்பூ சூரியனுக்கும், நெய்தல் மகாலக்குமிக்கும், வெண்டாமரைப்பூ கலைமகளுக்கும் மிக்க விருப்பத்தைத்தரும். அச்சத்தை உண்டுபண்ணும் தெய்வங்கட்கு சிவப்புநிற மலர்கள் விசேடம். நெய்தற் பூவும், நீலோற்பலப் பூவும் எல்லாத் தேவர்கட்கும் உவப்பானவை. எல்லா மலர்களிலும் மேம்பாடுடையனவுமாம்.

## இன்ன மலர் இன்ன் தேவர்க்கு ஆகாதெனல்

தும்பை மறையோர் தமக்காகா; துர்க்கைக்கறுகம் புல்லாகா;
வெம்பு கதிர்வா னவன்றனக்கு வில்வம் ஆகா விநாயகற்கு
வம்பார் துளபம் தானாகா; வடுகன் றனக்கு வலம் புரியும்
அம்பை தனக்கு நெல்லியும் இங்காகா என்பர் அறிந்தாரே 28

தும்பை அந்தணர்க்காகாது. துர்க்கைக்கு அறுகு ஆகாது. சூரியனுக்கு வில்வமாகாது. விநாயகனுக்கு துளசி ஆகாது. வயிரவருக்கு நந்தியாவர்த்தம் ஆகாது. உமையம்மைக்கு நெல்லி ஆகாது. ஆதலால் அவ்வத் தேவர்க்கு விலக்கப்பட்ட மலர்களை விலக்கிப் பூசித்தல் வேண்டும்.

## விஷ்ணுவுக்கு ஆகும் மலர்கள்

மாதவி குருந்து வாகை மதயாணி கருங்காக் கொன்றை
சீதள முருக்குச் செம்பட்டலரியே செம்பரத்தை
கேதகை கருந்துழாய்செந் திலகமும் கேசவற்காம்
நாதனுக் காகா இந்த நறுமலர் அலகைக்காமே 29

குருக்கத்தி, குருந்து, வாகை, மதயாணி, கருங்காக்கணம், குருக்கு, செம்பட்டி, அலரி, செம்பரத்தை, தாழை, கருந்துளசி, செந்திலகம் என்பன திருமாலுக்க மிக உகப்பான பத்திர புட்பங்களாகும். இவை சிவபெருமானுக்கு ஆகா. ஆனால் பேய் முதலியவற்றுக்கு உரியனவாகும்.

## திரிகால நிண்ணயம்

காலை யானது தாமது காலமே;
ஏலும் உச்சி இராசத காலமே;
மாலை நேரமும் வாழ்த்திடும் யாமமும்
சாலும் வைகறைக் காலமும் சாத்திகம்.

இறைவனைப் பூசித்தற்குரிய காலங்களில் காலைநேரம் தாமத காலம் எனவும், உச்சிக் காலம் இராசத காலம் எனவும், மாலை அர்த்தயாமம், வைகறை என்னும் மூன்று காலங்களும் சாத்வீக காலம் எனவும் கொள்ளப்படும்.

## தமோகால மலர்

போது ளோதிய பொன்னிறப் பூவுடன்;
சாதி நீலம் தவிர்ந்த கரியபூ
மாது கேளிவை தாமத மாமலர்;
ஓது காலையிற் சாத்துதல் உத்தமம். 31

மஞ்சள் நிறப்பூக்களும் நீலோற்பலம் தவிர்ந்த நீல நிறப் பூக்களும் தாமத காலமான காலை நேரப் பூசக்கு உபயோகித்தல் சிறப்பு.

## இராசத கால மலர்

செய்யதா மரைப லாசு, செங்கழு நீர்பொன் மத்தை,
செய்யமந் தாரை, செய்ய வழுதுணை, செய்ய பட்டி,
செய்யபா திரியே, செய்ய புலிநகக் கொன்றை உச்சிக்
கெய்திரா சதப்பூ வாகும்; எழுந்தபட்டலரிப் பூவும். 32

செந்தாமரை, முருக்கு, செங்கழுநீர், பொன்னூமத்தை, சிவப்பு மந்தாரை சிவப்புக் கத்தரி, சிவப்புப் பட்டி, செம்பாதிரி, சிவப்புப் புலிநகக் கொன்றை, பட்டலரி என்னும் பூக்கள் இராசத காலமான உச்சிக் காலத்துக்குரியன.

## சாத்துவிக கால மலர்

வெள்ளைமந் தாரை, பிச்சி வலம்புரி வெண்காக் கொன்றை,
வெள்ளை அம்புயம், எருக்கு, மல்லிகை, வெள்ளி லோத்தி,
வெள்ளலரி யின்பூத், தாளி, மிளர்புன்னை, மகிழ்செவ்வந்தி,
தள்ளருந் தும்பை, சாதி சாத்திக மலர்க ளாமே. 33

வெள்ளை மந்தாரை, பிச்சி, நந்தியாவர்த்தம், வெண்காக்கணம், வெண்தாமரை, வெள்ளெருக்கு, மல்லிகை, வெள்ளோத்தி வெள்ளையலரி, கூதாளி, புன்னை, மகிழ், வெள்ளைச் செவ்வந்தி தும்பை, ஜாதிமல்லிகை என்பனவற்றின் பூக்கள் வைகறை மாலை, அர்த்தயாமம் ஆகிய காலங்களில் பூசைக்கு சிறப்பானவை.

## எல்லா மலரும் ஆம் எனல்

கூறும் பூவிங் கிதுவென்று குறிப்பா ருளரோ குவலயத்தில்
நாறும் பூவும் தேவருக்காம்; நாறாப் பூவும் தேவருக்காம்;
தேறும் பூவை ஆகமத்திற் கரைகண் டவரார்! சிவன் முடிமேல்
ஏறும் பூவாய் வனத்தி லுள்ள எல்லாப் பூவும் பயன்படுமால் 34

பூசைக்குரிய பூக்கள் இவைமட்டுந்தான் பிற ஆகா என வரையறுத்துக் கூறவல்லவர் உலகில் உளரோ? இப் பூமயில் கிடைக்கக்கூடிய வாசனை உடைய மலர்களும் வாசனையற்ற மலர்களும் தெய்வ ஆராதனையில் உபயோகிக்கலாம். மலர்களின் நியதி பற்றி ஆகமங்களிலே சொன்னவற்றை முற்றும் உணர்ந்தவர்கள் இவ்வுலகில் ஒருவரும் இல்லையாதலால் காடுகளிலும், நந்தவனங்களிலும் கிடைக்கக்கூடிய எல்லா மலர்களும் சிவபெருமானின் திருமுடியில் சாத்தக்கூடிய மலர்களேயாம்.

## சிவபூசை செய்தவைகள்

குதிரை, சிலந்தி, கழுகுடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, சிதல்,
மதுவண், டலவன், கரிஅரிஆ, மஞ்ஞை, எகினம், புறா, ஆந்தை,
ததியெண்(கு) ஆமை, முயல், கோம்பி, தத்தை, கேழல், அருச்சிப்,
விதியும் விலக்கும் கடந்தாற்கு விதியால் ஒன்றை விதிப்பாரார்! 35

குதிரை, சிலந்தி, கழுகு, உடும்பு, குரங்கு, நரி, ஈ, எறும்பு, கறையான், தேனீ, நண்டு, யானை, சிங்கம், மயில், அன்னம், புறா, ஆந்தை, கரடி, ஆமை, முயல், பச்சோந்தி, கிளி, பன்றி முதலிய பிராணிகளெல்லாம் சிவபிரானைப் பூசித்து மேன்மையடைந்துள்ளன எனச் சிவபுராணங்களும் தல புராணங்களுங் கூறுவதால் ஆகமவிதிவிலக்குகளை அறியமாட்டாத பிராணிகளுக்கெல்லாம் அருள் புரியும் இயல்புடையவரும் விதி விலக்குகட்கு அப்பாற்பட்டவருமான சிவபெருமானுக்கு உரியது இதுதான் என ஒன்றை விதிப்பவர் உலகில் எவருமில்லையாம்.

வேடவடிவாய்ப் புலைச்சியிடும் வில்வம் புனைந்து சண்டாள
வேடம் சுமந்து சோமாசி வேள்வி யகத்து விடக்கேந்து
வேடன் சுட்ட சுடுகாட்டு வெந்த சாம்பல் மிசைந்தார்க்கும்
வேடன் எச்சில் நுகர்ந்தார்க்கும் விதியால் ஒன்றை விதிப்பாரா! 36

வேடவடிவினையுடைய புலைப்பெண் கொடுத்த வில்வத்தை அணிந்தவரும் சோமாசி மாறநாயனாருடைய வேள்விக்குச் சண்டாள வடிவத்துடன் கட்குடமும் சுமந்து சென்றவரும் ஒருவேடன் சுடுகாட்டுச் சாம்பரை நிவேதனமாகப் படைக்க அதை ஏற்றுக்கொண்டவரும், வேடனாகிய கண்ணப்பரின் எச்சிலை விரும்பி உண்டவரும் ஆன சிவபெருமானுக்கு உரியது இது என்றும் உதவாதது இது என்றும் நியமிப்பார் யார்தானுண்டு? ஒருவருமில்லை. ஆதலால் சிவபெருமானைப் பூசிப்பவர், வணங்குபவரிடத்து அன்பு ஒன்றே இருக்க வேண்டும் என்பது இப்பாடலுக்குரிய வரலாறுகளால் அறியவருகின்றது.

குன்று, மரம்புல் இவைமுதலாகக் கோம்பி, உடும்பு தாமுதலா
அன்றில், கழு(கு) ஆந்தைகள் முதலா அரவு, சிறுதேள்
இவைமுதலாப்
பன்றிகரடி, எலிமுதலாப் பரமற் குரிமைப் பயன்படலால்
இன்று முதலா நாயடியேன் எல்லாப் பிறப்பும் வேண்டுவனால் 37

மலை, மரம், புல், முதலியனவும் பச்சோந்தி, உடும்பு, நரி முதலியனவும் கிரௌஞ்சப் பட்சி, கழுகு ஆந்தை முதலியனவும் பாம்பு, சிறுதேள் முதலியனவும் பன்றி, கரடி, எலி முதலியனவும் ஆகிய இவை எல்லாம் சிவபூசைக்கு ஒவ்வொரு விதத்தில் பயன்படுகின்றன. ஆதலால் இவ்வுண்மையறிந்த இன்றுமுதல் நாயடியேன் சிவபூசைக்குப் பயன்படுதற்காக எல்லாப் பிறப்புக்களையும் விரும்புகின்றேன்.

எல்லாப் பிறப்பும் வேண்டுவனால் என்பதற்கு எல்லாப் பிறப்புக்களையும் அடைய விரும்புகின்றேன் என்றும் எல்லாப் பிறப்புக்களையுமடைந்த உயிர்களை மட்டுமன்றி உடல்களையும் நேசிக்கின்றேன் என்றும் பொருள் கொள்ளலாம்.

## இன்னமலர் இன்ன பாவத்தை நீக்கும் எனல்

எள்ளுநெடும் பிரமகத்தி தன்னை நீக்கும்;
இதழிதா யாரைக்கொன்ற ஏதம் நீக்கும்;
வெள்ளெருக்குப் பரதார வினைத ணிக்கும்;
வில்வமது பொய்யுரைத்த வெம்மை நீக்கும்;
கள்ளுணவு கோங்கம்பூப் புனைய நீக்கும்
கத்தரியின் இலைபுனையக் குட்டம் நீக்கும்
உள்ளியதெல் லாம்எய்தும்; வறுமை நீக்கும்
ஒண்துழாய், மலர்களினும் உயர்ச்சி தானே. 38

எள்ளுப் பூவினால் சிவனை அர்ச்சித்தால் பிரமகத்திதோடம் நீங்கும். கொன்றைப் பூவால் பூசித்தால் தாயாரைக் கொன்ற பாவம் நீங்கும். வெள்ளெருக்கால் அர்ச்சித்தால் பிறன் மனைவியரை விரும்பிய பாவம் நீங்கும். வில்வத்தால் அர்ச்சித்தால் பொய்யாலுண்டாகும் கொடும்பாவம் நீங்கும். கள் குடித்ததால் வரும்கொடிய பாவம் கோங்க மலரால் அர்ச்சித்தால் நீங்கும். கத்தரி இலையாற் பூசித்தால் குட்ட நோயை நீக்கும் வெண்துளசியால் அர்ச்சித்தால் எண்ணிய எண்ணங்களைக் கைக்கூடச் செய்யும்.

தும்பைமலர் கோகத்தி தோஷம் நீக்கும்;
  சொன்னம் நயந்திடுகளவு பலாசு நீக்கும்;
தம்பிதமை யனைக்கோறல் அறுகு நீக்கும்;
  சாத்திடுஞ்சந் தனம்மகா துக்கம் நீக்கும்
அம்புவியில் இலிங்கபின்னம் அசோகு நீக்கும்;
  அடைந்தோர்தம் வறுமையெல்லாம் ஆண்பால் நீக்கும்;
வம்பவிழ்நெய் நெல்லியிவை உரோகம் நீக்கும்;
  வளர்நீலோற் பலம்நீக்கும் வாக்குத் தோஷம். 39

தும்பை மலராலருச்சித்தல் பசுக்கொலைப் பாவத்தை நீக்கும், முருக்கம் பூவாலாருச்சிருத்தல் பொற்களவினாலுண்டாகும் பவத்தை நீக்கும். அறுகம் புல்லாலருச்சித்தல் தம்பி தமயனைக் கொன்ற பாவத்தை நீக்கும். சந்தன இலையாற் பூசித்தல் தீராத துக்கங்களைத் தீர்க்கும். லிங்கத்தில் ஏற்படும் கெடுதிகளை அசோகமலரால் அருச்சித்தால் நீக்கும். பாலாபிஷேகம் செய்தல் வறுமையை நீக்கும். நெல்லிப்பத்திரத்தால் பூசித்தால் தீரா நோய்களைத் தீர்க்கும். நீலோற்பல மலரால் அருச்தித்தல் தீய வாக்கினால் ஏற்படும் தோஷங்களை நீக்கும்.

## இன்னமலர் இன்னபோகத்தைத் தரும் எனல்

பாதிரிஅம் பிகைக்கனியின் இல்லாள் எய்தும்;
  பலாசமலர் அருச்சிக்கப் பணிகள் உண்டாம்;
கேதகையின் மலர்ச்சாதச் சிவிகை யெய்தும்;
  கிளர்முல்லை மலர்சாத்தக் கவிதை உண்டோம்;
தாதுமா துளைசாத்தத் தனங்கள் எய்தும்;
  தாமரையின் மலர்சாத்தப் பகைகள் நீங்கும்;
மேதகுநா ரத்தையிலை வியந்து சாத்தில்
  விரைத் தகரைச் சாத்தியிடில் பசுவுண்டாமே. 40

உமாதேவியாருக்குப் பாதிரிப்பூச் சாத்தினால் நல்ல மனைவியை மணத்தல் உண்டாகும். முருக்கம் பூவால் அருச்சித்தால் நல்ல ஆபரணங்கள் கிடைக்கும். தாளம் பூவாற் பூசித்தல் சிவிகை கிடைக்கும். முல்லை மலராற் பூசித்தால் வெண்கொற்றக்குடை கிடைக்கும். மாதுளம் பூவால் அருச்சித்தால் செல்வங்கள் உண்டாகும். தாமரைப் பூவால் அம்பிகையைப் பூசித்தால் பகைகள் நீங்கும். நாரத்தையாலும் கையாந்தகரையாலும் பூசித்தால் பசுச்செல்வம் உண்டாகும்.

தேக்கமழும் எலுமிச்சைக்(கு) ஆடு பல்கும்;
செங்கழுநீர் மலர்சாத்தப் புரவி எய்தும்;
காக்கமழு மலர்சாத்தக் கமலை சேர்வாள்;
கல்லார மலர்சாத்தப் புதல்வர்ப் பேறாம்;
மாக்கமழும் நெய்தலுக்(கு) அர்த்தங்கள் உண்டாம்;
மது அபிடே கம்பணிற் கீதம் உண்டாம்;
பாக்கியங்கள் அத்தனையும் வேண்டும் என்னில்
பருமளமா மலர் அனைத்தும் பார்பதிக்(கு) அர்ச்சனையே 41

எலுமிச்சைப் பத்திரத்தால் பூசித்தால் ஆடுகள் பெருகும். செங்கழுநீர் மலராலருச்சித்தால் குதிரை கிடைக்கும். காக்கணவன் பூச்சாத்தினால் இலக்குமி கடாட்சம் உண்டாம். நீலோற்பல மலர் சாத்தினால் நன்மக்கட்பேறு உண்டாம். நெய்தல் மலரால் அருச்சித்தால் பலவிதச் செல்வங்களும் உண்டாகும். தேனால் அபிஷேகம் செய்தால் சங்கீதம் உண்டாகும். எல்லா நன்மைகளையும் அடைய விரும்பினால் பார்வதி தேவியை வாசனை பொருந்திய எல்லா மலர்களாலும் அருச்சித்தல் வேண்டும்.

அரிசியோ டறுகு சாத்தல் அருக்கியம் பூவினாலே
பரிவுறக் கொடுத்தல் யாக புண்ணியம் பலவும் உண்டாம;
விரிமலர் நீலம் அத்த யாமத்தில் விசேட மாகும்;
பரிமளந் தோய்த்தும் ஈசன் பதமலர் சாத்தலாமே. 42

அரிசியோடு அறுகம் புல்லையும் சேர்த்துச் சாத்தினாலும் பூவினாலே அருக்கியம் கொடுத்தாலும் யாகங்களைச் செய்த பலன் உண்டாகும். நீலோற்பல மலரை அர்த்த யாமத்து சிவபெருமானுக்குச் சாத்துதலும், வாசநீர் தோய்த்த மலரால் அருச்சித்தலும் விசேடமான நன்மைகளைத் தரும்.

## சூரியனுக்கு வில்வமும், விநாயகருக்கு துளவமும் ஆகாமைக்குக் காரணம்

சூரியன் தினத்தில் ஈசன் சூடலால் சூரியற்கு
நேரிய வில்வம் ஆகாவாயின நிருமலருக்கு
நாரிதன் கொங்கையே போல் நயத்ததால் துளபந்தன்னைச்
சீரிய முன்னோன் வேண்டான் சிவன் சொல்லக்கேட்டு 43

வாரபுட்பத்தில் ஞாயிறன்று வில்வம் சிவபெருமானுக்கு உரியது என்றபடியால் சிவபெருமானை வில்வத்தாற் பூசித்தலை யன்றிச் சூரியன் தன்னை வில்வத்தாற் பூசித்தலை விரும்புவதில்லை. திருமால் தன் தேவியின் மார்பினை விரும்புதல் போலத் துளசியை விரும்புகின்றார் எனச் சிவபெருமான் சொல்லக் கேட்ட விநாயகர் துளசியை வெறுத்துவிட்டார்.

## செவ்வந்தி மலர்

சாரமா முனிவன் அன்று சாத்துசெவ் வந்திப் பூவை
வாரமா னுடனே சூட மணமாரி உறையூர்ப்பெய்தச்
சேரமான் பரவலான செம்பியன் பட்ட தன்மை
யோரமா உரைக்கற்பாலர் அரனசிராப் பள்ளி தன்னில் 44

சாரமா முனிவர் என்பவர் அன்றொருநாள் திருச்சிராப் பள்ளியில் எழுந்தருளியுள்ள சிவபெருமானுக்குச் சாத்திய செவ்வந்திப் பூவை ஒரு மனிதன் விரும்பி எடுத்து அணிந்ததால் அந்நாட்டுத் தலைநகரமுள்ள உறையூரெங்கும் மண்மாரி பெய்தது அன்றியும் அந்நாட்டரசனான சோழ மன்னனும் இறந்தான். சோழநாடு சேரனுக்கு உரிமைப்பட்டது. இச்செய்தியால் சிவபெருமானுக்குச் செவ்வந்திப்பூ மிகவும் பிரீதியானதென்று அழகாகச் சிராப்பள்ளி ஊரவர் கூறுவர். சிவார்ப்பணம் செய்யப் பட்ட பொருளைக் கவர்தலால் நாட்டுக்கும் அரசனுக்கும் கேடாகும் என்பதையும் புலப்படுத்துகின்றது.

## தாழம்பூ

திருமுடி கண்டேனென்னு திசைமுகன் பொய்யுரைப்ப
இருமடி கரியா நிற்ப இருவர்க்கும் சாபம் எய்த
வருமடி யவர்கள் கைதை மலர்சிவன் முடியிற் சாத்தார்
பெருமுடி வரினும் பொய்ச்சொற் பிதற்றிடா பெரியோராவார் 45

சிவபிரானின் முடியைக் கண்டேன் என்று பிரமன் பொய் சொல்லும்போது தாழம்பூவும் பிரமனுக்குச் சாட்சியாக நின்றது அதனால் பிரமனுக்கும் தாழம்பூவுக்கும் சாபம் ஏற்பட்டது. தாழம்பூ சாபம் பெற்றதினால் அன்பர்கள் சிவபூசைக்குத் தாழம் பூ அருகதை அற்றது என விலக்குவர். மிக்க வறுமையோ துன்பமோ ஏற்பட்டாலும் பெருந்தன்மையுடைய பெரியோர் பொய் சொல்லார்.

## நந்தவனம் வைத்ததினாற் சிவத்துரோகம் தீர்ந்தமை

அந்தணன் ஆலயத்தில் அரன் பூசைக் கேறும்
அரம்பைநறுங் கனிவாங்கித் திவசஞ் செய்ய
வந்தபெரும் பாவத்தால் நரகம் எய்த
மறலியுடன் மாலயனும் அறியோம் ஐயா
இந்தநர கிவன் எய்தும் காலம் என்ன
இவன் கிளையில் ஒருவரும்அங் கின்மை யாலே
நந்தவனம் முனிஇயற்றி நறும்பூச் சாத்த
நான்மறையோன் அம்மலரால் நரகந் தீர்ந்தான். 46

ஓர் அந்தணன் ஆலயத்திலுள்ளதும் சிவபூசைக்கு உரியதுமான வாழைப்பழத்தைப் பிடுங்கித் திவசம் செய்தான். சிவத்திரவியங் கவர்ந்த பாவத்தால் அவன் நரகத்தை அடைந்தான். யமனும் திருமாலும் பிரமனும் இவன் எப்போது நரகை அடைந்தான். எப்போது நரகை நீங்குவான் என்பதை அறியோம் என்றனர். சந்ததி விருத்திக்கு ஆதாரமான திவசத்திற்குச் சிவசொத்தை உபயோகித்தபடியால் அப்பிராமணனின் வம்சமும் அழிந்தது. இப் பிராமணனுக்கிரங்கி ஒரு முனிவன் முறைப்படி நந்தவனம் வைத்து மலர் கொய்து சிவபெருமானுக்குச் சாத்தி அருச்சிக்க அப்பிராமணன் நரகத்திலிருந்து விடுபட்டு நன்மையுற்றான்.

## வியாக்கிரபாதர் முதலியோர் பூவால் அருச்சித்த முறைமை

சிறையளி புகுதா முன்னம் சிறுகாலை எழுந் திருந்து
பொறைமரம் வழுக்கா தேறப் புலிநகம் பெற்றும் அந்த
நறைமலர்ப் பழுதுபார்க்க நகநறுங்தொறுங் கண்படைத்தும்
குறைவறப் புரிந்தான் பூசை குயவரிப் பதத் தினானே. 47

வியாக்கிரபாதர் என்னும் முனிவர் ஆகம முறைப்படி மலர்கொய்து பூசித்தலையே பெரும் பேறாகக் கருதி வண்டுகள் மொய்க்காமலும் பிற பழுதுகள் இல்லாமலும் மரங்கள் வழுக்காமல் ஏறியும் பூ எடுப்பதற்கு ஏற்ற வகையில் கால்களிற் புலி நகங்களும் கைகளில் புலி நகத்தோடு கண்களும் சிவனருளாற் பெற்றுக்குறைவற மலர்களை எடுத்துப் பூசித்துச் சிவபெருமானின் அருள்பெற்று மகிழ்ந்தார்.

கங்கையில் மிதந்த பூவைக் கழுவியே அருச்சித்தோனும்
வெங்கலின் மலரிட் டோனும்; விழிமலர் சாத்தி னோனும்
மங்கையர் முலைமேற் கிள்ளித் தாம்பூலம் வைத்தோன்றானும்
சங்கரற்குகந்த அன்பால் தலையினால் சாத்தி னோனும் 48

கங்கையில் மிதந்து வந்த மலர்களை நிர்மாலியமன்று என்று கழுவி அருச்சித்த உபமன்யு முனிவரும் கல்லையே (மலர்போல) எறிந்து வழிபட்ட சாக்கிய நாயனாரும் தன் கண்ணையே மலராகக் கொண்டு அருச்சித்த திருமாலும் தான் விரும்பிய பெண்ணின் மார்பினை சிவலிங்கமாகப் பாவித்துத் தாம்பூலம் வைத்துப் பூசித்த ஒருவரும் மலர்கள் தவறாமல் தலையில் வைத்து தலைமயிரால் பாதுகாத்துக் கொணர்ந்த மலர்களை சாத்திய கண்ணப்ப நாயனாரும் தமது பக்தி சிரத்தையே பெருங்காரணமாகச் சிவனருள் பெற்றுள்ளார்கள். ஆதலால் வழிபாட்டின் பொருட்டுப் புத்திரபுட்பமெடுப்பவர்களும் புத்திர புட்பங்களால் அருச்சிப்பவர்களும் பக்திச் சிரத்தையுடனேயே இக் கைங்கரியங்களைச் செய்தல் அவசியம்.

## நினைவு வேறாதல் ஆகாதெனல்

கொந்தலர் கொய்யும் போது கூர்விழி மைய லாலே
பைந்தொடி மயவார் தம்மைப் பார்த்தலால் கைலை வெற்பில்
சுந்தரன் பட்ட காதை அறிதிரே துணர்மென்போதால்
அந்தணர் கீழ்க ளாவார். கீழ்கள் அந் தணர்க ளாவார் 49

சிவபெருமானுக்குச் சமீபத்திலிருக்கும் பெரும்பதவியை உடைய சுந்தரர் மலர் கொய்யும் போது அழகிய பெண்களை இச்சித்துப் பார்த்த குற்றத்தால் பூமியிலே சாதாரண மனிதனாகப் பிறக்கும் நிலை ஏற்பட்டதை அறிந்தவர்களாக எல்லோருமிருப்பதால் மலர் கொய்தல், பூசித்தல் ஆகிய வேலைகளில் பிற எண்ணங்களை விட்டு சிவத்தியானத்துடன் இருக்க வேண்டும். நந்தவனம் வைத்தல், அதற்குதவல், பூ எடுத்துக் கொடுத்தல், பூசித்தல், பூசிப்பித்தல் ஆகிய கருமங்களின் போது தவறு செய்தலினால்

அந்தணர் கீழ்மக்களாகின்றனர். இக்காரியங்களின் போது சிரத்தையும் தூய்மையும் உடையவராகச் செய்தலினால் கீழ்மக்கள் அந்தணர்களாக உயர்வடைவர்.

பெருக்கமா மலர்க ளேனும் பிஞ்ஞகன் பிரியங் கூரான்
சுருக்கமே யெனினும் ஐயா தூய்மையே அணையுங் கண்டீர்!
உருக்கமும் இன்றிப் பூவும் உதகமும் பழுதே யானால்
அருட்கணும் உளவோ கண்ணில் அருவருத் திடுவான் ஐயன் 50

மலர்கள் பெருந்தொகையாக இருந்தால் அது சிவபெருமானுக்கு உவப்பை மிகுவிக்கும் என்பதில்லை. குறைந்த தொகையான மலர்களாயினும் அவை தூய்மையும் பக்தி சிரத்தையும் பொருந்தியனவாயிருப்பின் சிவபெருமான் ஏற்றுக்கொள்வார். அன்பும் தூய்மையும் இல்லாத மலர்களும் நீரும் அமையுமானால் அவற்றின் பொருட்டு அருள்செய்ய மாட்டார். அவற்றைக் கண்டால் சிவபெருமான் அருவருத்து விலகுவார்.

## விரத்தர் தன்மை

ஆம்விரத்தி முதிர்ந்தவர்கள் அருச்சனையுஞ் செய்ய வேண்டின்
பூமரத்தின் உதிர்ந்தமலர் புன்சருகுங் கொளற் பாலார்
மாமரத்தின் கோலொசித்து வாய்விளக்க வுங்கொள்ளார்
தாமொருத்தர் தரங்கொள்வர் தாவரங்கள் சலியாமே 51

உலக வாழ்வை வெறுத்து துறவறம் பூண்டோர் பூசை செய்ய விரும்பினால் மரத்திலிருந்து உதிர்ந்த மலர்களும் சருகுகளுமே கொள்ளுதற்குரியர். (ஏனையோருக்கு இவை ஆகா) பல் விளக்கும் குச்சிதானும் தங்கள் கையால் முறித்தலாகாது. பிறர் மரத்திற்குக் கேடுண்டாகாமல் முறித்துக்கொடுத்தால் மட்டுமே ஏற்கலாம்.

## மாவிளக்கிடு முறைமை

தவறறப் பகலூண் நீக்கிச் சனிப்பிர தோட மாதல்
சிவநிசி யாதல் வெண்டாமரையின்நூல் திரியால் தூண்டி
அவமறு செஞ்சம் பாவின் அரிசிமா அகலாப் பண்ணிக்
கபிலைநெய் கொண்டு தீபங் கண்டுளோர் கொண்டுளோரே 52

சிவபெருமானுக்கு மாவிளக்கிட விரும்புவோர் பகலுணவை விடுத்து விரதமாக இருந்து சனிப்பிரதோசத்திலாயினும் சிவராத்திரியிலாயினும்

மாவிளக்கிடுதல் வேண்டும். வெண்டாமரைத் தண்டின் நூலால் திரிசெய்து குற்றமற்ற செஞ்சம்பா அரிசி மாவால் அகல்செய்து கபிலை நெய்கொண்டு மாவிளக்கு ஏற்றல் வேண்டும். (முருகனுக்கு மாவிளக்கு ஏற்ற விரும்புவோர் செஞ்சம்பா அரிசிமாவிற்குப் பதிலாக செந்தினை மாவினால் அகல் செய்வர்)

உத்தம் ஒருமுந் நாழி: ஒன்றரை நாழி நெய்தான்
மத்திமம்: அதமம் தானும் மற்றதில் பாதி நெய்யாம்:
கைத்திரி அளவு கையிற் பருவிரல் கணித மாகும்;
அத்திரி எரியும் செந்தீ அங்குலம் ஆறி ரண்டே. 53

3 நாளிகை அளவுநேரம் தீபம் எரியும்படி மாளிவிளக்கிற்கு நெய்யிடுவது உத்தமம். 1½ நாழிகை நேரத்துக்கு நெய்விடுவது மத்திமம். ¾ நாழிகை நேரத்துக்கு நெய்விடுவது அதமம். மாவிளக்கில் இடப்படும் திரி கைப்பெருவிரல் மொத்தமாகவும் தீபச்சுடர் பன்னிரண்டு அங்குல உயரமாகவும் இருத்தல் வேண்டும். (தீபச்சுடர் 12 அங்குல உயரமாக இருத்தலுக்குக் கைப்பெருவிரல் மொத்தத்தினும் அதிகமாகத் திரி தேவைப்படின் சேர்க்கலாம்) ஏனெனில் தீபச்சுடரின் அளவு பிரதானமாகக் கவனிக்க வேண்டும்)

## நூல் செய்தோர் பெயரும், முதனூலும் நூற்பெயரும், நூற்பயனும்

ஆர்புனை சடையோன் சைவ ஆகமங் களைஆ ராய்ந்து
பேர்புனை கமலை ஞானப் பிரகாசன் தமிழாற் சொன்ன
வேர்புனை தளஞ்சேர் புட்ப விதிமாலைப் படியே பாரிற்
சீர்புனை பூசை செய்வோர் திருவருள் பெறுவர் தாமே 54

திருவாத்தி மாலையணிந்த சிவபெருமான் சைவாகமங்களை ஆராய்ந்து புகழ்பொருந்திய திருவாரூரில் தோன்றிய ஞானப்பிரகாச பட்டாரகர் தமிழ்மொழியில் இயற்றிய ஒழுங்கமைந்த நூலாகிய புட்பவிதியைக் கற்று அதன்படி இவ்வுலகில் சிறப்புப் பொருந்திய பூசை செய்பவர்கள் சிவபெருமானது திருவருளை எளிதிற் பெறுவர்.

**புட்பவிதியும் பொழிப்புரையும்**
**முற்றுப்பெற்றன.**

